





22-1-2024

மனைவி அமைவதெல்லாம்





















pax.ravichandra@gmail.com

Pax Ravichandra

மனைவி அமைவதெல்லாம்	
எண்	உள்ளடக்கம்

காதல் தூவானம்

உன்னை நினைக்கவா? என்னை மறந்தாய்?
உயிர் துடிக்கவா என் காதலைத் துறந்தாய்?

வானூரும் நிலவோ? தேனாரும் மலரோ?
உன்னை கண்டபோது
என் நெஞ்சில் காதல் பூப்பூத்ததடி

என்னைக் காணும்போது மட்டும்-ஏனடி
உன் கண்களிலும் இதழ்களிலும் மோகனப் புன்னகை?
பொன்மேனியிலோ நாணத்தின் பொன்னகை

நடமாடும் தாஜ்மஹாலாய்-என்னுள் புதையுண்ட
உன் காதலோடு ஷாஜகான் நான்.

உன்னை முத்தமிட்டபோது தெரிந்தது
அமுதின் சுவை.-உன் இதழ்களிலோ அமுதம்
உன் மடியினிலோ சொர்க்கம்.

பூவைக் கொய்திட வாள்கள் எதற்கு?
காதல் கனியைப் பறித்திட
கணைகள் எதற்கு? விழிகள் போதுமடி

பார்த்தும் போதை பருகியும் போதை
பாவையே உன் பூவிழிகளில்
தேனா மதுவா நிரம்பித் ததும்புவது?

என் பிரியமானவளே
உன்னை நினைத்து துடிக்கின்றேன்
பிரிந்து தவிக்கின்றேன்-இதுதான் காதலா?

காதலே உன் நெஞ்சைத் திருடி
என் நெஞ்சில் வைத்த காதல் கைதி நானடி

கெஞ்சினேன் மயிலே நீயோ மசியவில்லை
அஞ்சிட சிறையெடுத்தும்-அன்னமே நீ அடிபணியவில்லை
என் வீரமும் தோற்றிட விவேகமும் வெட்கிட
வெல்ல முடியாத உன் இதயத்தை மண்டியிட்டு
இரைஞ்சுகின்றேன்-சீதா காதல் தருவாயா
கண்மணி சீதா ?

உன்னை நினைக்கும்போதெல்லாம்-நெஞ்சிலே
பொங்கிடும் தேன்கங்கை-என்னை நீ மறக்கும்பொதோ
மங்கையே, என் விழிகளிலோ சோககங்கை.

கண்ணாடியில் தெரியாத என் அழகு
உன் கண்களில் தெரியும் போதெல்லாம்
பூரித்துப் போறேனடா என் கண்ணாளா

உன்னை அடையமுடியாவிட்டாலும்-கடலலைகள்போல்
உனக்காய்த் துடிக்கும் நெஞ்சினலைகள் கேட்கின்றதா?

நிலவாய் நீ தூர இருந்தாலும் அல்லிமலராய்
உன்னைக் கண்டு காதல் கொண்ட என் மனது.

கண்காணாத தொலைவில் என் காதற் கடலே நீயிருந்தாலும்
நதியாய் உன்னை நோக்கியே என் காதல் பயணம்.

என்னை மறந்தவளே-மடியும் வரை
என் உயிர்ச்சுவாசத்திலும், துடிக்கும் இதயத்திலும்
உன் நினைவு மட்டும்தானடி

உன்னை நேசிக்கிறேன் என்பதற்காகவா
என்னைப் பாராது -விழிகளால் இம்சிக்கின்றாய்.?

என் வாழ்க்கைப் பயணத்தில் பயணிகள் பலர்
துணையாய் வர உனக்கு மட்டும்தான் என் அழைப்பு
ஏற்பாயா இல்லை மறுப்பாயா?

என் நினைவுகளில் நான் இல்லையென்றாலும்
என் கனவிலும் நீ, நினைவிலும் நீ

இமையாய் அருகிருந்தும் உன் காதலை அறியாத
குருடனாய் நான்.

உன்னைக் கண்டபோது-இதயமெல்லாம் நீ
நெஞ்சமெல்லாம் காதல் -உன்னைக் காணாதபோது
இதயமெல்லாம் காயம் -எண்ணமெல்லாம் சோகம்

எனை நீ மறந்தபின் சுடுகாடான
என் வாழ்வு-எரிந்தும் தீயாமல்
இன்றும் உனக்காய்த் துடிக்கும்
என் இதயம்

ஓ என் மலர்விழி -அன்று உன்னைப்
பார்தபோதெல்லாம் உன் விழிகளிலோ பூமழை-
என் இதயத்திலோ காதல் மழை

இன்றோ, ஏனடி முள்ளைத் தந்துவிட்டு
மலரைச் சூடிக்கொண்டாய்-
நெஞ்சில் தீயை மூட்டிவிட்டு
தென்றலை எடுத்துச் சென்றாய்?

உன்னை நினைந்து துடிப்பதும்
பிரிந்து தவிப்பதுமா அன்பே காதல்?

காதல் பொங்கும் காட்டாறு
ஒரு கரையாய் நீ மறு கரையாய் நான்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-03-05-23

காதலின் பாதையில்

மலையைத் தொட்டும் தழுவியும் செல்லும்
ஓடும் மேகங்கள்போல் மனதை தொட்டும்,
தடவியும் சென்ற காதல்-உயிரைத் தொட்டு,
உதிரத்தை கொதிக்க வைத்து,
இதயத்தை துடிக்கவைத்த உணர்வுகள்

கண்ணீர் பூக்கள் உதிர, கவலைக் காளான்கள் முளைக்க,
நெஞ்சை பாலையாக்கிய நிகழ்வுகள்,
"என் தேவனே என் தேவனே ஏன் என்னை கைநெகிழ்ந்தீர்"
என இறைவனைக் கூவியழைத்த கதறல்கள்.

காதலின் பாதையெங்கும் நொருங்கிய இதயத்தின்
இரத்தத் துளிகள், காதல் கவிதைகள், வாழ்த்து மடல்கள்
உதிர்ந்து வாடிய ரோஜாக்கள். இன்றும் குத்திட
வலிக்கும் முட்கள்., மதுப்புட்டிகள், விஷகுப்பிகள்

தேவதாஸ்-பார்வதி, லைலா-மஜ்னு, அம்பிகாபதி-அமராவதி,
அனார்கலி-சலீம், ரோமியோ-யூலியட்
என்ற காவிய நிலைகள்

இதயத்தின் ஆழத்தில் இரகசியமாய் புதைந்து கிடக்கும்
"காதல் மயானம்"
நினைவுகளை தோண்டிட, கசியும் ரத்தத்தோடு
ஆறாத ரணத்தின் அழுகைச்சத்தம்

நெஞ்சை உருக வைத்த உணர்வுகள்
இதயத்தை எரித்து, கண்ணீரில் கரைத்த
"காதலின் சாம்பல்கள்."

இன்பவனமான இதயம் எரி நரகாய் மாறிட,
வாழ்வுக் கனியான காதலும், காதலியின்றிக் கருகிட
ஏக்கம், சோர்வு, ஏமாற்றம் என எண்ணில்லாத வேதனைகள்
துடித்த இதயமும்-அவளின்றி மெல்ல ஓயும்
வாசமாய் மணந்தவள் சுவாசமின்றிக் காதலும்
மெல்லச்சாகும். காதல் நெருப்பில் விளையாடிய-விட்டில் பூச்சி
காதல் யாகத்தில் ஆகுதியாகும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-03-05-23

காதலும் கடந்து போகும்

எண்ணங்களில், வண்ணங்கள் மலர, இதயத்தில்
தேனகங்கை பாய, சுவாசத்தில் வாசங்கள் மணக்க,
மழையும். முகிலும், நிலவும் மனதை தொட்டுச் செல்ல,
நெஞ்சில் கனவுகள் பூத்ததடி காதலே உன்னால்.

உன்னோடு ஒரு முறையேனும் வாழ
ஆயிரம் முறை சாகத் தயார் என இதயம் பாட,
ஒரு ரோஜாவை கொடுத்து காதலைச் சொல்ல
ஒரு கவிதையால் உன் மனதை வெல்ல,

விழிகளால் தொட்டுத் தழுவி
மொழிகளால் கொஞ்சிக் குலவி மகிழ்ந்த
காதலும் கடந்து போகும்- ஆசையும், மோகமும்,
கவர்ச்சியும், காமமும் கழிந்திட
காதலும் கானல் நீராகும்-?

கடந்துபோன காதல்களால்-மயானத்தில் சிதைந்து கிடக்கும்
கல்லறைகள், அழியாக் காதலுக்கு சாட்சியமாய்
அழகு மாளிகையாய் நிமிர்ந்து நிற்கும்
உலகில் ஒரே ஒரு தாஜ்மஹால்.

இதயங்களை ஈர்க்காத காதலும் கடந்துபோகும்
மேகங்களே, இதயம் எழுதாத ஓவியமும்-
வண்ணம் கலையும் சித்திரங்களே!

காதலும் கடந்துபோகும் வாழ்வின் பருவங்களே
கடந்துபோன காதலுக்கு-
பாலையான மனங்களே சாட்சி

உறவுகளும் கலையும் கனவாகிட, ஓடும் நதியும்
ஒவ்வொரு நொடியிலும் இடம் மாறிட
வேரில்லாக் காதலும் காய்ந்துபோகும்
நீரில்லாப் பயிராய் வாடிப்போகும்.

தொப்புள் உறவையும் மறக்கும் உலகில்
தாலிக் கயிற்றால் பிணைத்த உறவில்
காதலும் நாட்பட அறுந்து போகுமோ?

நாட்பட நாட்பட போதை தரும் மதுவாய் மாறிட
காதல் ஒன்றும் கனிரச மதுவல்லவே?
காதலும் கடந்துபோகும் பொய்யல்ல

கடந்துபோகக் காதல் என்ன தென்றலா?
கரைந்து பொழியக் கார் காலமேகமா?
பிறைய்த் தோன்றி-பௌர்ணமியாய் பூரித்து
நிலவாய் தேய்ந்து அமாவாசையில் மறைய
காதலுக்கும், கருவான் நிலவின் வாழ்க்கை வட்டமா?

காதல் இதயத்தின் ஒலி கடலின் அலை,
சங்கின் நாதம், குயிலின் பாட்டு,
கிளியின் மொழி, மலரின் வாசம்

காதலும் கடந்துபோனால் தாஜ்மஹால் நிலைத்திருக்காது
அம்பிகாபதி-அமராவதி-லைலா-மஜ்னு, ரோமியோ-யூலியட்
காவியங்கள் மலர்ந்திருக்காது.

கடந்துபோன காதலும் கழிவானது
நிலைத்த காதலோ-கவிஞர்
பாடிடக் காவியமானது.

காதலும் கடந்தபோகும் ஒரு தலைக்காதலானாள்
இதயம் தொடாத காதல் எல்லாம் கலையும்
இளமைக்கனவுகளே, இன்பம் நாடி-காமம் தோன்றப்
பூத்து வாடும் ஒருநாள் பூக்களே!

காதலும் வெண்மேகமா கடந்துபோயிட
கார்மேகமா மாரியில் மழையாய்க் கரைந்திட?

காய்ந்து வரண்ட மண்ணில்
கண்ணுக்குத் தெரியாத உறக்கத்தில் விதைகள்,
மழைவிழ, மண்நெகிழ-
முளைவிடும் புற்களாய் காதல் நிலைகள்

அசோகவனத்தில் கண்ணீரில் தழைத்த சீதையின் காதலும்
ஸ்ரீராமன் காட்டுக்கு அனுப்பிட-பின்நாளில்
கடந்துபோனதோ, காய்ந்துபோனதோ?
என்னில் மலர்ந்த காதல் மறைந்து போனது
புதைந்து வைரமாய் ஆனது
மனச் சிப்பிக்குள் முத்தாய் ஒளிர்ந்து கிடக்குது.

மன அரிப்பின் உரசல்களுக்கு
மற்றோர் உடல் உரசல்- காமமேயன்றி
நிலைக்கும் காதல் உறவல்ல?

தட்டானின் பொய்யால் அறுந்தது
கண்ணகியின் தாலி, வண்ணாணின்
வசைகேட்டு வாடியது சீதையின் தாலி

இதயம் தொடாத காதலும்
இமயம்தான் தடுத்தாலும் கடந்துபோகும்,
தேகங்கள் உரசியபின்
தீக்குச்சியாய் அணைந்துபோகும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-03-05-23

காதலும் நஞ்சோ?

காதலாகி நிலவொளியில் கதைபேசி மகிழ்ந்ததுவும்,
அலைபேசியல் கவிதை சொல்லி காதலை வளர்த்ததுவும்,
விழிகள் கலந்து, விம்மி நெஞ்சம் விழி நீர் பெருக நின்றதுவும்,
உயிரோடு மெய் கலந்து உணர்வு விழித்து களித்ததுவும்
காதலானதே கண்மணி-இன்று எல்லாம் கலைந்த கனவானதே

நிலவொளியில் நான் காய, கனவுலகில்
மனம் சாய-காதலும்
பொய்யாய்ப் பழங்கதையாய் போனதே
என் கவிதைகளும் இரசிகையின்றி வாடுதே

என் நெஞ்சுக்குள் இன்றும் தணியாத காதல் வலி,
அவளை எண்ணும்போது துடிக்கும் நெஞ்சு
கவிதை எழுதும்போது தவிக்கும்-மூச்சை முட்டும்
அவள் நினைவுகள் என் உயிர் மூச்சை இன்றும் வாட்டும்.

கதைபேச ஆசித்தேன்-காதல்கிளியோ
ஊமையானது-காணத்துடித்தேன்-
காதல் நிலவிற்கோ அமாவாசையானது

உலவும் தேன்நிலவோ வானில் ஓடி விளையாட
அலையும் கடலாய் மனம் மண்ணில் அழுது திண்டாட
காதலும் பொய்யாகிச், சூடிய மலரும் முள்ளாகிட
மங்கையின் காதலும் கொல்லும் நஞ்சானது.
காதல் நெஞ்சோ கண்ணீரில் தவமியற்றுது.

பாம்பின் நஞ்சுக்கும் மருந்துண்டு-கொல்லும்
பாவையர் காதல் நெஞ்சின் நஞ்சுக்கு
சாதல்தான் மருந்தோ நெஞ்சே நீ சொல்!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-03-05-23

காதலும் பொய்யே!

என்னை மறவேன் என்றவளும் மறந்துபோனாள்,
உன்னைப் பிரியேன் என்றவளும்-காதலாகிக்
கடல் கடந்து காணாமல் போனாள்.

வண்ணமலராய் என்னைச் சூடி மகிழ்ந்தவளுக்கு
வாடிய பூவானேன்-உதிர்த்து விட்டாள்.
சோடிக்குயிலாய் என்னோடு பாடிமகிழ்ந்தவளுக்கு
சோகப் பண்ணானேன்-என்னை
ஒற்றைக் குயிலாய்ப் புலம்பவிட்டாள்.

காதல் உலகில் வாக்குறுதிகள் எல்லாம்
காற்றில் எழுதிடும் வெற்று வார்த்தைகளோ?
நீரில் இட்ட வண்ணக்கோலங்களோ?

சிறகொடிந்த பறவையாய் நான் தவிக்க-
அவள் தன் சிறகை விரித்தாள்,
இதழ் உதிரும் ரோஜாவாய் நான் வாட
ராஜாவிற்கு அவளோ புதுரோஜாவானாள்.

எங்கிருந்தாலும் வாழ்க என்று என் இதயம்
வாழ்த்திட, விழிகளிளோ கண்ணீர் கங்கை
உடைந்த உள்ளம் ஊமைாய் அழ
மொழிகளிலோ சோகக் கவிதை

வாடும் ரோஜாவய் மன இதழ்கள் உதிர
ஒவ்வொரு இதழிலும் பூத்த நிற்கும் ஞாபகங்கள்,
வாடி அழகிழக்கும் நிலையிலும் வாழ்க என்றே
அவளை, வாழத்திடும் காதல் நிலைகள்
என் காதல் ஒருமுறைதான் கண்மணி
அதுவும் உன்னோடுதான் பொன்மணி

என் காலடித்தடங்களை அழித்திடும் கடல் அலைகளால்,
என் கண்ணீர்த் தடங்களை அழிக்கமுடியவில்லை,
என்னைத் தழுவித்தேற்றும் தென்றலால்
என் தணியாத சோகத்தை மாற்ற முடியவில்லை.

காத்திருப்பேன் என்றவளும் காணாமல் போனாள்-எந்நாளும்
உன்னோடு வாழ்ந்திருப்பேன் என்றவளும்
வார்த்தை மறந்து கண் மறைந்து போனாள்

மங்கை தந்த சோககங்கையோ-விழிகளில்
காதல் தந்த கவிதைக் கங்கையோ மொழிகளில்
என் காதலும் வெறும் கவிதையானது-என் சோகமும்
ஞானப்பணயத்தின் தொடக்கமானது.

என்றும் நீயிருப்பது என் உள்ளம் என்று
இன்றும் உனக்குத் தெரியாது.
என் காதலே எங்கிருந்தாலும் நீ வாழ்க

சொல்லாமற் பிரிந்தாலும்-பிரிந்தவள்
நலம் வாழ -எந்நாளும்
வாழ்த்துவதுதான் உண்மைக் காதல்-
காதலே வேதம்

காதல் இதயத்தின் மொழி-என்
கவிதையிலோ சோகத்தின் ஒலி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-03-05-23

கேதார கௌரி



திருக்கைலையில் சிவபார்வதி திருக்கோலம்
தேவருக்கும் முனிவருக்கும்
தீராத பேரானந்த மனக்கோலம்.

ஈசனையும், அன்னையையும், தேவரும், முனிவரும்
வணங்கி ஆசி பெற- விகட நடனத்தாதால்
ஆசையறுத்த பிருங்கி ஆனந்த நடராஜனை மகிழ்விக்க
பரந்தாமனும் மகிழ்ந்தே முனிவனைப் புகழ்ந்தார்.



தொழத் தக்கவனை தொழுதலே நம் கடன்
யோகசித்தன், ஆதி குருவை பணிதலே என் வரம்
முனி பிருங்கியும்-வானோரும், தேவரும்
வணங்கிடும் ஈஸ்வரி தாழ் தொழாது-சற்குருவை
வண்டுரு எடுத்து தொழுது இன்புற்றார்

சினமுற்ற சிவகாமியும் சித்தன் பிருங்கியைச் நொண்டியாய்
கடிந்திட, சிவனும் சித்தன் நிலையறிந்து கோல் கொடுத்தே
பிருங்கன் புகழ் பாடிப்போற்றிட-முனியும்
மீண்டும் ஈசனை மட்டும் தொழுது விடைபெற்றிட
மனங்கசந்தாள் மணாளன் மங்கலநாயகி

மாதும் அருகிருக்க, மகாதேவனை மட்டும் வண்டுரு எடுத்து
தொழுது இன்புற்ற இருடியை புகழ்ந்தார் பிறைசூடி
பூமுகம் வாடித் துன்புற, வாடிய பூவனமும் மலர்ந்தாடி இன்புற
கைலாச வாசகி லோகேஸ்வரனைப் பிரிந்து பூவுலகு வந்தாள்.

பதியில் பாதி நானாக-நான் வதியும் உயிரும் உடலும் பாதி சிவனாக,
உமாபதியில், உமா பாதியாக, மண்ணும், விண்ணம்
மகிழ்ந்து தொழும் சிவவக்தி நாமமாக,- கௌதமுனி சொற்படி
உமையொரு பாகனாய் மாறிட-அம்மானை வேண்டி-அம்பிகை
கேதாரீஸ்வர தவமிருந்தாள் பூவனத்தில்.

ஒரு போதும் உன்னை மறவாத உள்ளம் வேண்டும்
உயிராலும், உடலாலும் பிரியாத வரம் வேண்டும்
அரனே, சிவனே, எனையாளும் ஆதிசங்கரனே
ஆட்கொண்டே சங்கரிக்கு அருள்வாய் வரமென்றே
ஊன் துறந்து, உறக்கம் மறந்து-தவமாய்
மூவாரம் தவமிருந்தாள் ஜெகதீஸ்வரி

சித்தன் மேல் காதல் பித்துற்ற பிச்சி
கலியான சுந்தரன் மேல் தீராக் காதலுற்ற சுந்தரி
ஆனந்தக் கூத்தன்மேல் கொண்ட காதலால்
அணங்குறை பங்கனாய் மாறிட அருந்தவமிருந்தாள்

சிவன் நினைவோ சிந்தையை அணையாத் தீயாய் வாட்டிட
சிவகாமியோ கொழுகொம்பில்லாப் பூங்கொடியாய் வாடிட
பிறை காணும் போதெல்லாம் பிறை சூடனை எண்ணித்
துடிக்கும் காதல் மனம்-தென்றல் தீண்டும் போதெல்லாம்-ஈசன்
அணைப்பின்றி அனலில் திருமேனி தீக்குளிக்கும் தினம்.

என் காதல் மணாளனே, கலியாணசுந்தரனே
முத்த மழையில் என்னை நீராட்டு -சுந்தரேசனே
மோகனப் புன்னகையால் என்னைச் சீராட்டு



சித்தம், நினைப்பு, செய்கை எங்கும்-சொக்கனே
தித்திக்கும் உன் காதல் என்னை வாட்டிட-சிவமே
சிவகாமி மனமோ உனை எண்ணி எண்ணி ஏங்கிட
வாட்டும் காதல் சுரத்தால் வாடிய-உமையாள்

உயிராலும், உடலாலும் உன்னைப் பிரியாது வாழ-சுந்தரேஸ்வரா
உன்னில் ஒரு பாதி ஈந்து உமையொரு பாகனாய் என்னை உருமாற்று
உன் பிரிவோ என் மரணம்-உன் பிரசன்னமோ என் ஜனனம்
மனம் வேண்டிட மலை மங்கைத் தவமிருந்தாள

கைலையில் ஆடும் கலாபமயிலே ஆனந்தநடராஜனே,
ஆடியே, உன் அளகு என்னைக் கொண்டாடு,
மலைமகள் என்னை காதலால் கொண்டாளு

காதல் தவத்தால் சிவனே உன் பாதி நானாக
பதி பக்தியே தவமாக, பசுபதியே என் வரமாக
ஆட்கொள்வாய் ஈசனே .அருள்புரிவாய் என் நேசனே.

அரனே நீயே என் காதல் அரணாக-காதல்
வரத்தால் உன் கன்னியும், முக்கனியிலும் இனிதாக,
அமுதும், தேனும் செவ்விதழ்களின் சுவையாக-அழகனே
அழகைப் புசித்தே, அம்பிகையின் காதல் பசியாற்று

அழகிய சிவமே, ஆனந்தநடராஜனே
வெட்கம் மறந்து உன்னை அழைக்கின்றேன்-சொக்கனே
வாட்டும் விரகதாபத்தால் ஒற்றைக் குயிலாயக் கரைகின்றேன்-
கயிலைக் குயிலே கானம் பாடு, வரதராஜனே வரம் கொடு

பட்ட மரத்தீயாய் என் உயிரும், மெய்யும்
காமேஷ்வரனே, உன் காதலால் பற்றி எரிய
பொற்றாமரைக் குளமும் போதாது-நெற்றிக்கண்ணா
காமேஷ்வரி நெஞ்சுற்ற காதல் தீயணைக்க
கட்டியணைத்து முத்தமழை பொழிந்து
என்னைக் காத்தருள்வாய்-உமா-மகேஷ்வரனே.



கருவிழிகளும் வண்டாய்ப் பூவிழிகளில் காதல் தேன்பருக
நெற்றிக்கண்ணோ, மங்கை நோன்பால் உற்ற துயர் கண்டு உருக
காமவீணை இசைக்க, மோகராகம் ஒலிக்க
மயங்குகிறாள் சுந்தரேசன் பேரழகில் பேதை
மாதொருபாகனாய் மாறிட விரதம் பூண்ட கோதை

கௌரி, நோன்பிருந்து நூற்ற விரதம்
கௌரி மணாளனை மகிழ்ந்தழைக்க-
சொக்கனும், சொக்கியே சுந்தரிக்கு வரமளிக்க
மாதொருபாகனாய் தேவன்-தேவியின் தோற்றம்.

உமையாள் பங்கனும் இமையாது உமையாள் திருவழகைப் பருக,
சிவத்தை பருகி செவ்விழியாய், காமாட்சி பூவிழிகளும் சிவக்க
ஆனந்தக் கூத்தாடும் அம்பிகை நெஞ்சம்-கூத்தாடி
ஆனந்த நடராஜனையே ஆடவைத்த அழகு மஞ்சம்

அழகன் உன் அணைப்பால் அழகும் மலர்ந்து களிக்க,
என் செவ்விதழும், சுந்தரனே உன் முத்தங்களைப்
போதாது, போதாது என்றே உண்டு சிவக்க
உன் உயிரோ, சொக்கநாதனே என் உயிரைத் தழுவி
காமவேதம் இசைக்க-சிவமே என் தவமே
நீ தந்த வரம் அரிது

சாமவேதமோ
த்த த்வம் அஸி என்றது-என் காதல் வேதமோ
உன்னில் பாதி –உமையாள் என்றது.

நாணமோ என்னைத் தடுக்க- நங்கை மனமோ
கானம் பாடும் வானம் பாடியாய் உயரப் பறக்க,
என் கொஞ்சும் புறாவே-கனவிலும் என்னைக்
கொத்தி தின்னும் காதல் கிளியே, என் உயிரும் மெய்யும்
உன் நினைவால் மோகனராகம் இசைக்க
இரவிலும் உறங்காத உன் இதயவீணை நான்

காதல் அஞ்சுகம் தரும் பெருஞ் சுகமோ பேரின்பமாக-
கைலையில் கூடி மகிழும் காதல் கிளிகளோ
கஜீராஹோவை காட்டும் இன்ப நிலைகளாக
படைப்பின் பரம ரகசியமாக-அரூபரூப சிவலிங்கமாக
அற்புத அர்த்தநாரிஸ்வர அழகாக
எங்கும் காதல் மயம் எல்லாம் சிவசக்தி மயம்.

கௌதமுனி காட்டிய வழியிலே
நோன்பு நூற்று மாண்புற்ற பார்வதி
கேதாரகௌரி நோன்போ
மங்கையர்க்கோ மாறாத சங்கநிதி.



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

கொள்ளை அழகடி நீ

கொள்ளை அழகடி நீ-என்னைக் கொல்லும் அழகே நீ
கட்டிக் கரும்படி நீ -என் காதல் நிலவும் நீ
காயாத காதல் கங்கை நீ
என்தன் தேவலோக மங்கையும் நீ

வாசமலரடி- சுகந்தி நீ- என்தன் வண்ணமலரடி
அழகுசுந்தரி நீ-மணிமொழி, அருள்மொழி, கனிமொழி
என்தன் கவிதையோ உன் தேன்மொழிகள்தானடி

என்னைத் தகிக்கும் காதல் தீயோ -வசந்தி
அணைத்தே என் நெஞ்சத்து காதல் தீ அணையடி

எனை சூடும் தேவதையே -பூங்குழலி
நல்லரத்தினம் நானடி
எனை மாலையிட்டு சூடடி நவமணி

கானக்குயிலே என்தன்- கோகிலா
உன்தன் சோடிக் குயில் நான்தானடி

புண்ணிய நதி கங்கா நீயடி
காதல் நீராடும் பக்தன் நானடி

முல்லை மலரடி நீ-இனிக்கும்
தெள்ளு தமிழடி-தமிழினி

சூடிக்கொடுத்த ஆண்டாள் நீயடி-நவநீதன் நான்
சூடவிரும்பும் பூங்கோதையும் நீதானடி

மையிட்ட விழிகளால் மயக்கிட்ட கயல்விழியே
நெஞ்சம் மயங்கிட்ட களை நானடி
உள்ளம் மகிழும் பழமே, உண்டு காதல் பசியாற
மாது உளம் கனியடி என்தன் மாதுளம் பழமே

என் உள்ளத்தை கொய்த கொய்யாப் பழமடி-காதலி
கிளி கொத்தாத கோவைப் பழமும் நீயடி

சாந்தராஜன் நானடி- நான் சூடிய
மனோரஞ்சிதமும் நீயடி

வியக்கும் அழகே எனை மயக்கும் திராட்சை மதுவே
காமத்துப்பாலே, காமன் கணையே
வேல்விழிகளால் பைங்கிளி என்னைக் கொல்லடி
தேனிதழ்களால் தேன்மாங்கனி என்னைத் தீண்டடி

வான் நிலவே -உன்வரவு கண்டு மலரும் -அல்லியே
தேன்தமிழே உன்னை சொல்லில் வடிக்கும்
காதல் கவிஞன் நான்தானடி

என் இதயத்தைக் கவிழ்த்திட்ட காதல் புயல் நீயடி
என் இளமையை நீராட்டும் தேன் மழையும் நீதானடி

மயக்கும் தேன்நிலவாய் மதுமதி நீயடி
நெஞ்சத்தில் என்றும் மறையாத சந்திரமதி நீ
வளர்ந்து தேயும் மதியோ வானில் என்றும் வாடாத
இந்துமதியோ, சிந்து பாடும் காதலன் நெஞ்சில்

கொள்ளை அழகடி நீ-என்னை
கொல்லும் அழகே நீ-வெள்ளை கமலமடி நீ
காதலன் என்தன் உள்ளக் கமலமும் நீ

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

மடியாத காதல்

பார்க்கத் துடிக்கும் இதயம்-அவள்
கடைக்கண் பார்வையின்றிப் பூக்கமறுக்கும்,
ஏங்கித் தவிக்கும் காதல் நெஞ்சம்
எரியும் மெழுகாய் உருகிக் கரையும்.

பாடி அழைக்கும் நெஞ்சம்-பதிலின்றி
ஒற்றைகுயிலாய் கேவிக் கரையும்- தேன்நிலவை
தேடித் தவிக்கும் இதயம்
அமாவாசை இருளில் மூழ்கித்தவிக்கும்.

விம்மித் துடிக்கும் கன்னி மனம்
அலைகடலாய் அலைந்து தவிக்கும்,
தென்றலும் தீயாக, பாலும், தேனும் வேம்பாக
பூவையின் பூத்த நெஞ்சும் வாடும் மலராகும்

வெட்டுக்கிளிபோல் துயர் நெஞ்சை அரிக்க,
பட்டுப்போகும் காளை உள்ளம்
பட்ட மரத்தில் ஒற்றைகுயிலாய்க் கூவிக்கரைந்து
ஏங்கித் தவிக்கும் பாவை நெஞ்சம்

காதல் சுரத்தில் வாடும் நெஞ்சம்
கன்னியின் காதலுக்காய் ஏங்கும்,
காதல் விடாயில் தவிக்கும் உள்ளம்
மறந்தவளை நினைத்து மதுவில் மூழ்கும்

அவள் ஒரு மொழிக்காய் செவிகளும்
அவள் ஒரு பார்வைக்காய் விழிகளும்
ஒன்றாய் தவமிருந்து வாடிக்களைக்கும்
மறக்கத் தவித்து மதுவை நாடிய நெஞ்சம்
நிம்மதி தேடி இறுதியில் நஞ்சை நாடும்.

மடியும் போது பிரியும் உயிரும்-மறந்தவளை
எங்கிருந்தாலும் வாழ்க என்றே வாழ்த்திப்போகும்
பிரியும் உயிரும் தன் பிரிய காதலை -மறவாது
மறு பிறவிக்கும் எடுத்துச்செல்லும்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

மாலை மயக்கம்

பூவுடல் தழுவிடப் போதாது இரு கைகள் என
மனம் தழுவித் தழுவித் தவிக்க, பொன்னுடல் வாசம் மோந்து
சுவாசம் மகிழ்ந்து மயங்கித் துடிக்க,
கட்டுடல் தழுவித் தழுவி கலவிச் சுகம் பெருகும்

நாடி நரம்புகள் முறுக்கேறி சுருதி சேர்க்க, கார்குழல் அவிழ்த்து
கள்மலர் மோந்து, நுதலில் இதழ் பதித்து, நூலிடை தடவி
மெய்யோடு மெய் சேர்த்து உயிர் சூடேற,
நீள்விழி சிவந்து, வாயிதழ் வெளுக்கும்

தித்திக்கும் செவ்விதழ்களை கவ்விக் கடித்து
செந்தேன் அருந்தித் துடித்து போதையுற,
மேகம் மூடிய முழுநிலவின் ஆடை களைய, அழகு ஒளிர
அங்கயற்கன்னியின் செவ்விழிகள் நாணி நன்றி சொல்லும்.

கண்மலர் மோந்து களிப்பைச் சொல்ல-கலசக் கொங்கைகள்
மார்பினை உழுது மயங்கித் துடித்து பூரித்து விறைக்க,
கைத்தலம் பற்றிக் கைகள் கைகளுக்குள் கட்டிக் கிடந்து
பிசைந்து தவிக்க, கலவிச்சுகத்தில் மூழ்கி, கண்கள் சிவக்கும்

கால் கொலுசும், கைவளையும் சினுங்கி
செவ்வாழைத் தொடைகள் மயங்கி விரிந்து வரவேற்க
பூரித்த பொற்கோல் பொன்மணியின்
கர்பகிரகம் புகுந்து வணங்கித் தொழுதிடும்

விந்தபிஷேகம் செய்து வியந்து மகிழ்ந்திட
அலை அலையாய் மட்டில்லா பேரின்பம்
மனவெளியில் பிரவாகிக்க,
கலவிச்சுகம் காதல் வேள்வியாகும்

நம்பியும், நங்கையும் ஆதாம் ஏவாளாய் மாறிட
அர்த்த நாரிஸ்வர அவதாரத்தில் அகங்காரம்
அழிந்து சமாதி பிறந்திட, ஆனந்த அத்வைத நிலையில்
காமம் கடந்த காதல் கடவுளாகிப் போகும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

மனைவி அமைவதெல்லாம்

ஓடியாடி உழைத்து-வயது அறுபது ஆனவுடன்
உழைத்தது போதும் இனி ஓய்வு என அரசு பணித்து,
ஓய்வூதியம் கொடுத்து வீட்டிற்கு அனுப்பிட
மனிதிலே பாரம், உடலிலே மெல்லிய நடுக்கம்.

ஓய்ந்து உட்கார்ந்து கண்ணாடி துடைத்து மாட்டி-
ஓர விழியால் மனைவியை உற்றுப் பார்க்கின்றேன்,
ஓயாமல் உழைத்து களைப்பறியாதவள் மலர்கூந்தலில்
நூறு வெள்ளி மலர்கள்-பூமுகத்தில் வியர்வை
அரும்புகள் பூத்திட, பொன்னுடலில் வாடலின் அறிகுறிகள்.

மங்கிய பொன்மேனி வண்ணமிழந்த ஓவியத்தைக் காட்டிட
வட்ட நெற்றித் திலகமோ பூத்த வியர்வையில் கரைந்திருக்க
வடிவம் மாறி வான்நிலவு தேய்வதை கண்டு.
விழிகளிலே துளிர்க்கும் கங்கை
காதல் நெஞ்சிலே இன்றும் காதலான மங்கை

நினைவுகளை மீட்டிப்பார்கின்றேன்.

நாணமும், வண்ணக் கூறையும் நங்கை நல்லழகைச் சொல்ல
வாசமல்லிகையும், முல்லையும் சுவாசத்தைக் கொள்ளை கொள்ள
மையிட்ட விழிகளும், மருதாணி பூசிய கரங்களும்
காதல் மழை பொழிந்து கட்டிக் கொள் என அழைக்க
கால் கொலுசும், நிலம் பார்த்த மதிமுகமும்
காமன் விருந்து படைக்க-வலது காலெடுத்த வந்த மகாராணி

கன்னியாய்க் காதலோடு கண்டவளை, -கண்கலங்கிட
வாழவைத்த தெய்வமாய்க் காண்கிறேன்.
வீட்டைக் கோயிலாக்கி- பழஞ்சோற்றையும் அமுதாக்கி
உழைப்பின் மீதியை சேமித்து உறவால் விளைந்த பயிர்களை
மனிதர்களாக்கிய மாங்கலய பந்தத்தை இரசிக்கிறேன்

உடையும் சொந்தங்களுக்கு பாலம் அமைத்து
அன்னை போனபின் அனைத்துமாகி அணைத்து நின்றவளை
வாழவந்தவளை -வலம் , இடம் தெரியாதவனுக்கு
வாழ்க்கையில் துணையாய்த் தோழியாய்த், தாயாய்
நடந்து வருவபளை தொழுதிடும் விழிகளோடு
பணிந்து நோக்குகிறேன், பொன்னுடலிலோ
தளர்ச்சி, பூ முகத்திலோ தாய்மையின் எழுச்சி

இன்றுதான் இவளை அன்று பார்த்தபின்
நின்று நிதானமாய்ப் பார்க்கின்றேன்
நெஞ்சிலே நன்றி பிறக்க,நினைவிலே காதல் பூக்க
நீர் பூத்த விழிகளை இரகசியமாய்த் துடைக்கிறேன்.

உண்டு, சுவைத்து உறங்கி மகிழ்ந்திட, நாளும் வீட்டிலே
விழா எடுத்த தெய்வம் ஓய்வின்றி, ஓய்வூதியமின்றி
உழைத்து களைக்க, கொடுப்பதற்று என்னிடம் ஏதுமில்லை
மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்து வரம்
வாழ்த்துவதைத் தவிர வார்த்தைகளில்லை

கூட்டிப்பெருக்கி, வாயிலில் கோலமிட்டுத், துணிதுவைத்து,
பிள்ளைகளின் துயர் துடைத்து-அறுசுவையோட
விருந்து படைக்கும் தெய்வம் மருந்து கேட்டுப் படுத்ததில்லை
மறந்தும், நான் உறங்கிட்டபோதும் என்
கால்களை பிடித்து நோ தீர்த்திட மறந்ததுமில்லை

கொட்டும் மலையருவிபோல்- குதுாகலத்தோடு ஒலித்த மெட்டி
நாள்பட ஆழ்ந்த தியானத்தில் ஓடும் அகன்ற கங்கையாய் மாறி
சாந்தி சாந்தி என்றே ஒலித்திட அன்பு நடமாடும் தெய்வத்தால்
வாழ்ந்த வீடு கோயிலானது வாழ்வு சொர்கமானது

அன்போடு அருகே வந்தவள் கரம் பற்றிட
பூமுகத்திலே பூத்திட்ட வெட்கப் புன்னகை
என்னை இளைஞனாக்கியது.

பிள்ளைகள் வளரப் விலகிப்போன நெருக்கம்
மீண்டும் உறவாய் மலர்ந்திட ஓடி உழைத்த கரங்களை
மெல்ல வருடிப் பார்க்கின்றேன்.

துன்பமும். இன்பமும் சூழும்போதெல்லாம்-சோர்ந்திடாமல்
விளக்கேற்றி, மலர்சாத்தி மனம் குளிர இறை வேண்டுதல் செய்பவள்
பூவாசமும், புதுநேசமும் வாழ்வில் கொண்டுவந்த தேவதை
பின் துாங்கி முன் எழுந்து அன்பினால் அனைவரையும் ஈர்த்து,
பாரமெல்லாம் தன் தோள் சுமந்த தாரம்

தாயாய் மாறிய தெய்வம், மகிழ்ந்திடக் கொடுப்பதற்கு
என்னிடம் ஏதுமில்லை இளகிய நெஞ்சும், ஈரவிழிகளும் தவிர
கண்மணி, ஈந்திட என்னிடம் ஏதுமில்லை, அன்பைக் கொடுப்பதே
தம் வரம் என்ற அன்னைக்கும், தாரத்திற்கும் நிகரேதுமில்லை

தெய்வங்கள் எதையும் கேட்பதில்லை
கொடுப்பதற்கு அன்பைத்தவிர ஏதுமில்லை
வீட்டில் தெய்வம் நடமாட
விளக்கேற்றித் தெருக்கோடி ஆலயத்தில்
நாளும் பூசைகள் செய்கின்ற மனிதர் நாம்

அருகில் வந்தவளை அன்போடு அரவணைத்து
மெல்ல மடி சாய்க்கின்றேன்
என் தாயே இனி உன் பிள்ளை நான்
தாய் மடி தா என் தாயே, அம்மா என்றேன்

விழிகளில் நீர் குலங்க-ஆனந்த
விம்மலும் அழுகையும் மனதை கலங்கடிக்க
என்னை அணைத்தவள்
தன் மடி கிடத்தி அன்போடு நோக்கினாள்

அண்ணலும் நோக்கிட அவளும் நோக்கினாள்
பூமுகத்தில் கோடிப் புன்னகை பூத்திட-கொஞ்சிடும்
கொவ்வை இதழ்களில் வெட்கம் செஞ்சந்தனம் பூசிட
இன்றும் காதல் மாறவில்லை நெஞ்சில் கனவும் ஓயவில்லை.

தாயாய் மாறிய தெய்வம் தன்மடி தந்தே என்னை,
தீராத விளையாட்டுப் பிள்ளை என்றே கொஞ்சி மகிழ்ந்திட
நெஞ்சிலே நிம்மதி இல்லமோ இறை சன்னிதி.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

மதுமலர் மாது

மதுமலர்க் கூந்தல் மாதுன்னில்
காதல் மதுவை ஊற்றிவைத்தானோ இறைவன்.
விடியும் வரை பருகியும் காமம் தீரவில்லை
விடிந்த பின்னரும் காதல் போதை தெளியவில்லை

மதுவின் போதையோ விடியும் வரைக்கும்
மைவிழியால் காதல் போதையோ
மடியும் வரைக்கும்.

உன்னை நான் நினைப்பதில்லை-ஏனெனில்
என்றும் உன்னை நான் மறந்ததில்லை
என்னை நீ நினைப்பதும் இல்லை- உன்னைதவிர
வேறு நினைவோ என் நெஞ்சில் இல்லை

தேவி உன் தரிசனத்திற்காய்
பகலிலே பக்தனாய் என் தவம்
இரவிலே காதலே, உன் கனவிற்காய்
இடைவிடாத என் செபம்.

வாழும்போது உனக்காய்த் தவமிருந்தேன்
காதல் தேவதையோ வரம் தரவில்லை-செத்தும்
கல்லறையில் தூங்காமல் காத்திருப்பேன்-தேவி
உன் காதலுக்காய்த் தவமிருப்பேன்

மலரான காதலும் முள்ளாய் மாறிட, விளையாத இடத்தில்
விழுந்த விதையாய்ஈ அன்பைப் புரியாத இடத்தில் விதைத்த
என் காதலும் பொய்யாய்ப் போனதே
இதயம் புண்ணாய் ஆனதே!

என்னுயிர்க் காதலைப் புரிந்தும், புரியாமல் நடிக்கும் உனக்கு
சாதலால் என் காதலைக் கடைசியாய்ச் சொல்கிறேன்
எங்கிருந்தாலும் வாழ்க நீ என்றே வாழ்த்திச் செல்கிறேன்
புரிந்தால் என் காதலுக்கு உயிர் கொடு, போகும் உயிரைக் காப்பாற்று
வாழ்க காதல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

மது மலர்

செவிவழி நுழைந்த செவ்வாய் மொழிகள்
மலைத் தேனாய் இனிக்க-நெஞ்சில்
காதல் விதை தூவிக் களிக்க-இதயம்
மலர்த்தேன் உண்ட மயக்கத்தில் மலைத்தேன்
காதல் தேனீயாய் ரீங்காரம் இசைத்தேன்

அஞ்சன விழிகள் ஆயிரம் காதல் கதை சொல்ல
பாலும் கசந்து பஞ்சணையும் நொந்திட-உயிரே
உனக்காய்த் துடிக்கும் என்னைக் கடைக்கண் பாரடி
காதலாகிக் கனிந்தே -கனியாய்
கன்னியே என் மடி விழுவாய் நீயடி

மொழியால் எழுதிய கவிதையை,-வேல்
விழியாள் எழுதிய கவிதை வெல்லப்-பிரம்மன்
அழகால் எழுதிய கவிதைஅமுதாய் நெஞ்சில் இனிக்க
காதல் நோயுற்றேன் காமன் கணைபட்டுக் காயமுற்றேன்
காமசுரத்திற்கு காதலே மருந்தென
அனுபூதியில் அறிந்த காதலன் யான்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

மோகினி

வான்நிலவோ?, தேன்மலரோ? கானக்குயிலோ?, நீலமயிலோ?
காமன் மகளோ? அமுதோடு வந்த அழகு தேவதையோ?
என் நெஞ்சை ஆட்கொள்ள-ஆண்டவன்
எனக்காய்ப் படைத்த அழகி ஏவாள் இவள்தானோ?

மனமோ மகிழ்ந்து கவி பாட
விழிகளும் இமைக்க மறந்து வியந்தாட
நெஞ்சோ துடிக்க மறந்து தவித்திட-அழகின்
அதிசயமோ என்னை ஆட்கொண்ட மோகினி.

மலர் கேட்டேன் முள் தந்தாள்
மனம் கேட்டேன்-மௌனம் மொழிந்தாள்
நிலவென்றேன் வான் நின்றாள்-கனவானது
காதல் நினவோ துன்பக் கவிதையானது

விழிகளிலோ துளிர்க்கும் கண்ணீர்
நினைவினிலோ காயாத செந்நீர்
கண் பார்த்து நெஞ்செழுதிய காதல்
கணை பட்டு வீழ்ந்த மானாது-காமன்
மலர்க் ணையால் என் மனம் வாடுது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

காதல் முக்தி

குமுத வாயின் அமுதத்தைச் சுவைத்திட
இனிப்பது “கள்ளோ” கனிரசமோ?-இவள்
“ ***தேன்மலரோ***”“***மன்மத மதுவோ***” மனம் மயங்கிட
அமுதைச் சுவைத்த மனதில் பொங்கிய ஆனந்தம்

உயிர். மெய்யை ஒன்றாய்ச் சிலிர்க்க வைப்பது
மலைத்தேனோ என மனம் மலைத்திட
இனியது மலைத்தேன் ஆயினும் அதிலும் இனியது
இவள் ***இதழ்தேன்*** என சுவைத்த மனம் புகழ்ந்தது

இதழ்களால் இதழ்கள் கடைந்து அமுது பருகிட
ரசித்துச் சுவைத்துக் குடித்து வியந்திட
காமன் கணைபட்ட இதயமோ அவள் வசம்
நாடி நரம்பெங்கும் பேரின்பப் பரவசம்

சுவையறியும் நாவும் சுந்தரியின் இதழ் “கள்” சுவைத்து
போதையில் கிறங்கிட விழிகளும் “காம பான” அழகைப் பருகி மயங்கிட
இதயத்திலே அலை அலையாய்ப் பாயும் காதல் மின்சாரம்
சுவாசத்திலோ மல்லிகை, முல்லை கலந்த பூவையின் வாசம்
காதலான இதயமோ மங்கை வசம்.

ஐம்புலன்களும் ஒடுங்கிப் பகுத்தறிவும் மயங்கிட
ஆவலாய் மீண்டும் மீண்டும் பருகத் தோன்றும் இதழமுது
தணியாத காதல் விடாய்க்கு அருமருந்து
இதழ் “கள்” அருந்து காமன் விருந்து

அறுசுவை அறிந்த மனம்-அறியாப்
பெருஞ்சுவை சுவைத்தே மயங்கியது,
காதலின் முக்திச்சுவை ஏழாம் பெருஞ்சுவை
காதல் போதையில் மொழிந்தது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

முள்ளும் மலரும்

வான் நிலவோ அமாவாசை இருளில் சிறையிருக்க,
தேன்மலரோ வண்ண இதழ் உதிர வாடிச் சோர்ந்திருக்க
துணையைத்தேடி கூவிக் கரையும் குயில்
இணையைப் பிரிந்து மடியத் துடிக்கும் அன்றில்

மலரான காதலும் மணமிழந்தால்
வாழ்வு முள்ளாகும்-உடைந்த உள்ளமும்
மதுவில் மூழ்கி. முகாரி பாடி
தேவதாஸாய்
வாழ்வே மாயம் எனக் கதறும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

நேச மலர்

அழகென்றேன், செவ்விதழ் அமுதென்றேன்
பௌர்ணமி நிலவென்றேன், வாசமலரென்றேன்
நினைவிலும், கனவிலும் வரும்
காதல் தேன் நிலவென்றேன்

நேசம் பூ வாசமாய் மணக்க-நித்தமும்
காதல் மழை பொழியக் காதலாகி
நெஞ்சில் மலர்ந்த கன்னி-
என் இதயவானில் உலாவந்த வான் மதி

பௌர்ணமியாய்ப் பூத்து பால் நிலவாய்க் காய்ந்த
கனவுக் கன்னி -கனவுகளால் காதல் சொல்லித்
தூங்கவிடாமல் என்னைத் தவிக்கவிட்ட செண்பகவல்லி

என் பூவனமும் மலரின்றி வாட-இன்று
என் பொன்வானமும் நிலவின்றிக் காய
முள்ளாகி, இருளில் வாடும் காதல் நெஞ்சம்.
கனவின்றி பாலையாய் காய்ந்துபோகும்
காதலனின் மலர்மஞ்சம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-05-05-23

நிலவே நீ சொல்

என் காதலும் வெறும் கனவோ?
பகல் நிலவோ?
சாதல்தான் என் உறவோ?
என் அன்பே நீ சொல்

காதலும் கனவாகிடப்-பாலையான மனமும்
காயாத கண்ணீரும் என் சொந்தமானது.
காதலும் கன்னியருக்குப் பொழுது போக்காகிட
சாதலே விடுதலைக்கு வழியானது.

அலையும் கடலும், இரையும் சங்குமாய்
உனக்காய்த் தவிக்கும் என் உடைந்த உள்ளம்
என் காதலை சொல்லியழ-என் காதலே
ஏனடி என்னைக் கைநெகிழ்ந்தாய்.

காதல் நீரிலிட்ட கோலமா?-கரைவதற்கு
காற்றில் எழுதிய ஓவியமா?-கலைவதற்கு
கல்லில் வடித்த சிற்பமடி பெண்ணே -இதயம்
கலந்து எழுதிய காவியமடி பெண்ணே

கண்ட நாள் முதல் ஏவாள் நீயென்றும்
ஆதாம் நான் என்றும் கவி பாடியவன் உடல்
இன்றோ சடலமாய்க் கரையொதுங்கிட
சங்கினுள் ஒலிக்கும் சந்தம்போல்
அழியாக் காதலைச் சொல்லும் மனம்

பூவாய் மலர்ந்த காதலில் பூ நாகம் புகுந்திட
அமுதான காதலும் ஆலகால விஷமாய்க் கசந்திட
காதலும் மாயைதானோ? என் வண்ணக்கனவும்
காகிதபூக்கள்தானோ வெண்ணிலவே நீ சொல்!

பூவையரே, நாளும் ஒரு பூவாய் சூட
வாடும் மலரல்ல காதல்
மாறும் மனமல்ல காதல்-இதயம் சூடிய
பொன்விலங்கு காதல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-05-23

நிலவில் மலரும் பூக்கள்

நிலவில் மலர்ந்த பூக்களாய்
வானில் உலவும் காதல் கிளிகளாய்
காதலர் எம் வாழ்வு.

இதயம் கவர்ந்த காதல் காந்தமோ
என் வாழ்வில் வந்த புது வசந்தமோ
காதலி இவள்

நிலவே நீ பிரிந்தால், என் வானம் இருளாகும்,
மலரே நீ இல்லையேல்-என்
பூவனமும் காடாகும்

காலைப் பனியாய் என்னை மூடி
காதல் நெஞ்சை குளிர்விக்கின்றாய்,
காலைக் கதிராய் நெஞ்சைத் தொட்டு
காதல் பூவை மலரவைக்கின்றாய்.

ஒரு பூப்போல் இதயம் மலர,
பொங்கும் காதல் வாசம் நெஞ்சை நிறைக்க,
என் வாழ்வில் காதல் தேவதையின் வரவு
கலையாத தவமாய் எம் காதல் உறவு

கூவும் குயிலாய் அவள் குரல் ஒலிக்க
சோடிக்குயிலாய் என் இதயம் குரல் கொடுக்க
காதல் வானில்
வானம் பாடிகளாய் நாங்கள்.

காதல் வந்தால் நிலவிலும் பூக்கள் மலரும்
பாலையிலும் மழைபொழியும்-
மொழியிலோ கவிதை மனதிலோ இளமை உலவ
வாழ்விலே நாளும் தேன் மழை பொழியும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-05-23

நினைக்கத் தெரிந்த மனமே

நினைப்பதற்கு உன்னைத் தவிர வேறு நினைவில்லை
என் நினைவோ, உன் நெஞ்சில் கொஞ்சமும் இல்லை
ஒரு தலைக் காதலும் நஞ்சாகக்-கங்கையோ
கண்களில் வழிந்தோட -சோகப்
பூகம்பத்தில் நொருங்கிடும் என் மனம்.

என் இதயமும் உனக்காய்த் துடிக்க
என் மனமும், மலராய்ச் உன்னைச் சூடத்தவிக்க
இசைக்கும் என் காதலும் ஏனோ
ஒரு தலைராகமானதடி

காதலைக் கவிதையாத் தூது விட்டேன்
கல்லில் பெய்த மழைபோல் என் காதலும் ஆகிட
கேவும் ஒற்றை குயிலாய் என் நிலையும் மாறிட
என் நெஞ்சிலோ ஓயாத துயரம்
என் விழிகளிலோ இன்றும் காயாத ஈரம்

பூத்த காதலும் பொழுது சாயமுன் சருகாய் வாடிட
புண்ணான நெஞ்சம் தேவதாஸாய் கதறிட
காதலும், கலைந்த கனவாய் ஆனது
கல்லில் தூவிய விதையாய்ப் போனது

ஏழு ஸ்வரங்களை கடந்த தேவராகமே
எட்டாத எட்டாவது காதல் ஸ்வரமாய் நீயடி
என் காதலும் மௌனராகமடி
என் ஒரு தலைராகத்தில் -என்றும்
கண்ணீர் ஸ்வரம்தானா சொல்லடி கண்மணி ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-05-23

ஓடும் மேகங்கள்

உன்னைக் கண்டபின்- என்னைக் கண்டுகொண்டேன்
எனக்கும் இதயம் உண்டென்று-அதுவும்
துடிப்பது உனக்காய் என்று.

கண்களால், கண்களுக்குள் காதலை விதைத்தவள்
ஈர இதழ்களால் இதழ்களில்
இனிக்கும் காதலைப் பருகத் தந்த
ஏவாள் இவள்தானா ? சொல் மனமே!

பல்லவியாய்த் தொடங்கி, அனுபல்லவியாய் நீண்டு
காதலே உன்னைச் சரணடைந்தேன்

காதல் வீணையில்தான் எத்தனை அதிசய ராகங்கள்
ஒவ்வொரு முறையும் மீட்டும்போது
புதையல்களாய் புதுப்புது ஸ்வரங்கள்.

உன்னைக் கண்டபோது-என் நெஞ்சில்
ஏனடி இந்த பொல்லாத காதல் விடாய்!

நீ போனபோது-என் இதயம்
மெழுகாய் உருகிப்போனது.

உன்னை மறக்க நினைக்கின்றேன்
உன் நினைவோ சுவாசக் காற்றாய்
என்னை நிறைக்கின்றது.

என் இதயம் பாறை என்று எண்ணியிருந்தேன்
உன்னை பாாத்தபின் தெரிந்தது உருகும் பனி என்று
காதலால் நான் நீயாகிப்போனேன்

காதல் வந்தபின்-என்
கனவிலும் நீ , நினைவிலும் நீ
என் காட்சியெல்லாம் நீயடி

இறைவன் இன்னும் என்னைக் கண்டுகொள்ளவில்லை
என் தனிமைத் துயரைப் புரிந்துகொள்ளவில்லை
இதயத்தால் படைக்கப்பட்ட ஒருத்திக்காய்
ஏங்கும் என் இதயத்தில்-ஆதாமின் தனிமைத் துயர்

நூலம் படையாய் -அவள் நெஞ்சில் என் நினைவகள்
நீலாம்பரியாய் என் நெஞ்சில் அவள் ராகங்கள்

பாலையில் நீர் தேடும் கலைமான்போல்-
தொலைந்த என் காதலைத்தேடும் என் இதயம்.

உன்னைக் கண்டபின் என்னைத் தொலைத்துவிட்டேன்
என்னிடம் இருப்பதெல்லாம் உன் நினைவு மட்டும்தான்.

உன் பார்வை படும்போது இதயம் பூப்பூக்கும்-
நீ என்ன காதல் கதிரவனா?

அமுதும் காதலே-மிஞ்சினால் ஆலகாலமும் காதலே

காடாய்க் கிடந்தேன் காதல்
வந்தபின் பூவனமானேன்

என் கவிதையெல்லாம்-அன்பே உன் காதல் பதிவுகளடி

கதிரைக் கண்டு மலரும் கமலமாய்-நீ
கருவான் நிலவே-நீ தழுவ மலரும் அல்லியாய் நான்

காதலே நீ என்ன சூரியசந்திரனா? இரவும் பகலும்-
நெஞ்சிலும், என் நினைவிலும் ஒளிர்கின்றாய்

உன் கண் வலையில் சிக்குண்ட
புள்ளிமானாய்த் தவிக்கும் என் நெஞ்சம்
நீ உதிர்த்த புன்னகைப் பூக்களால்
மணக்கும் என் காதல் மஞ்சம்.

உன் பூம்பாதங்கள் பதிந்த
என் இதயம்
காதல் சிவனொளிபாதமலையடி

உன் புன்னகைப் பூக்களிலிருந்து
இதயம் கட்டிய தேன் கூடாய்- என் காதல்

என் இதயக்கோயிலின் காதல்தேவதை நீ
அர்ச்சகனும், அநாதி பக்தனுமாய் நான்

என் இதயக்கதவைத் திறக்கும்
மந்திரச் சொல்லாய் உன் புன்னகை

காதல் மதுவே-கண்களால்
உன்னைப் பருகியும் போதை தணியவில்லை
காதல் மதுவும் தீரவில்லை

உன் கண்கள் விரித்த காந்தவலையில்
காதலாகி விழுந்தது, என் இரும்பு இதயமடி

காதல் சிலுவையில் என்னைத் தொங்கவிட்டாள்
தந்தையே!-இவளை மன்னியும்

என் காதல் நோய் தீர்க்கும் சஞ்சீவினி நீதானடி

உன் செவ்வாயிதழ்கள் மூடிக்கிடந்தபோது
வில்லாய் தெரிந்தன, விரிந்து மலர்ந்தபோது
செம்பூவாய் தெரிந்த மாயம்தான் என்ன?

விலக்கப்பட்ட கன்னியா நீ-சபிக்கப்பட்டாலும்
காதலால் உன்னை சுவைக்கும்
ஆதாம் நான்தானடி

கடவுள் உன்னை என் எலும்பால் படைக்காமல்
என் உயிர் மூச்சால் படைத்தார் போலும்
உன்னை காணும்போதெல்லாம்-மூச்சு முட்டுதடி-
இதயத்துடிப்பு கூடுதடி.

உண்டு மயங்கும் மதுவும் உண்டு
கண்டு மயங்கும் காதல் மது-காதலே நீயடி

என் இதய மீன்தொட்டிக்குள் உலாவரும்
காதல் பொன்மீன் நீயடி

என்னைக் கண்டதும் நாணிக் கனியும் காதல் கனியாய் நீ
நிலவே உன்னை கண்டதும் பொங்கி எழும்
காதல் கடலாய் நான்

உன் புன்னைகையால் திறக்கும் என் இதயப்பூங்கதவு

ராகம் தாளம் பல்லவி இல்லாத பாடல்
விழிகள் பேசும் கவிதை காதல்

உயிர்க் காற்றே நீயின்றி
என் காதலும் வெற்றுப் புல்லாங்குழலடி

அலைபாயும் காதல் கடலாய் நான்
அசையாத கரையாய் நீ

காதல் தீயை மூட்டிவிட்டு கண்களை
மூடிக்கொண்டாய்-வேகுதடி என் இதயம்

தேனோ மதுவாய் என்னை அருந்தி மகிழ்ந்தது,
மலரோ என்னைச் செஞ்சந்தனமாய் பூசி மகிழ்ந்தது.

என் இதயவில்லையின்-குவியத்தூரம் நீ
என் இதயவீணையின் மோகனராகம் நீ

என் இதயம் காதலில் விழுந்தபோது தெரிந்து கொண்டேன்
என்னை ஈர்க்கும் காதல்புலம் நீ என்று

உன் காதல் வலையில் சிக்கித் தவிக்க ஏங்கும்
பொன்மீனாய் -என் உள்ளம்
காதலி , கண்வலை வீசடி

என் காதலை நெஞ்சில் விதைத்து
மறைத்து வைத்திருந்தேன்- விழிகள் பூப்பூத்து
என்னைக் காட்டிக்கொடுத்ததடா

உன்னை முத்தமிட்டு என் காதலை
காட்டிகொடுக்க-காதலே
நானும் யூதாஸாய் மாறவா?

காதல் கிளியே-உன்னைக் கண்டு மகிழவா?
காதல் தேனே உனை உண்டு பசி தீர்கவா?

என் கைபேசியில் அழைப்புமணியாய்
-உன் கானச்சிரிப்பொலி

உன் காதல் மழை விழத் துளிர்க்கும் புல்லாய் நான்

உன்னைத் தேடி மேகமாய் அலைந்தேன்
மழையாய்க் கரையவிட்டாய்,
நதியாய் ஓடினேன் கடலாய் அணைத்தாய்
என் காதல் கடல் நீதானடி

உன் காதல் கூண்டுக்குள்
விரும்பி அடைபட்ட காதல் கிளி நான்

என் இதயவானொளியில்
நாளும் காதல் செய்தி வாசிக்கும்
காமன் மகள் நீதானடி

என் கண் வண்டில் சிக்கிய பொன்மலர் நீ
என கண்மலரைக் காதலிக்கும்
பொன்வண்டும் நீ

உன் கண்களுக்குள் யார் வைத்தார்
பொங்கும் ஆனந்தக் கங்கையை
நீராடத் துடிக்குதடி என காதல் இதயம்

மறைந்திருந்தாலும் மணம் வீசும் மல்லிகையாய்
உன் காதல் பூமணம் என் சுவாசத்தை எட்டுகிறது.

என் காதல் பள்ளியில்
கலைமகளும் நீ, காதலியும் நீ
மாணவனாய் நான்

ஒளியில் மலர்ந்து-ஒளியில் மடியும்-மலராய்
காதலே உன் சந்நிதியில் என் வாழ்வு

இளமை கழிய, முதுமை மலர
உன் காதல்-எந்நாளும் என் நெஞ்சில்
கல்லில் எழுத்தானதடி.

என் வானில் ஒரே பௌர்ணமி-அது நீதான்.

என் நினைவிலும் நீ, என் கனவிலும் நீ
தூங்கினாலும் வருகின்றாய்
உனை விட்டு நீங்கினாலும் தொடர்கின்றாய்

உன்னைக் காணும்போதெல்லாம்
என் இதயத்துடிப்பிலோ உற்சாகம்
செவியிலோ பூபாளம்-சுவாசத்திலோ பூவாசம்.

காதல், இதயங்களின் பண்டம் மாற்றமா?

காதலிற்கு பச்சைக் கொடி காட்ட
என்னை காணும்போதெல்லாம்
நாணிச் சிவக்கும் கன்னியோ
என்தன் காதல் கனி

உன் அஞ்சன விழிகளில்
கானக்குயிலை, காதல் துணையை
காதல் குயில் கூவியழைக்கும் பாவமடி

பருவகாலக் காதலினும்-மாரியாய்
கண்ணீர் மழையுமுண்டு- வசந்தமாய்
புன்னகைப் பூக்களுமுண்டு

கல்லாய் சுற்றும் நிலவு-ஸ்ரீராமன்
கால்படக் காத்திருக்கும் அகலிகையா?
ஆயிரம் கண்களோடு விழித்திருக்கும்
கருவான் இந்திரனா?
இரவில் தோன்றும்-இவர்கள் காதல்,
முனியின் சாபத்தாலும் மாறவில்லை?

உன்னைக் கண்டபின் ஏவாளே,
என் நெஞ்சுக்குள் ஏதேன் தோட்டத்தின் நினைப்பு
மும்தாஜே- நமக்காய் ஒரு தாஜ்மஹாலாய்
எழுப்பிட நெஞ்சில் தவிப்பு

காதலும், முள்ளில் மலரும் ரோஜாவா?

என் இதயக்கதவை நான் பூட்டவில்லை
ஏனடி உன் விழிச் சாவிகளை
வீணே போட்டு சுழற்றுகின்றாய்?

தேவர்கள் எல்லாம் உன்னைச் சூட ஆசைப்படும்போது-
என்க்கு மாலையிட்ட தமயந்தி நீதானடி

கண்களா இவை காதலின் காந்தப்புலங்கள்

எதற்கடி இந்த பர்தா?எனக்காகவா?
யார் கண்ணும் படாமல்
உன்னை நீ மூடிவைத்திருக்கிறாய்?

காதல் நதி பாய
இரு கரைகளாய்-நாம்

சுட்டபால்தான் ஆடையுடுத்தும்
சுடாத காமத்துப்பாலுக்கு ஆடை திரையடி-
அன்பே தடையடி

திரௌபதி நான் தர்மனடி
என்னைத் துச்சாதனன் ஆக்காதே

காதலே-நீ, தீயென தெரிந்தும்
விட்டிலாய் என்னைச் சுட்டுக்கொல்ல ஆசையடி

படிக்காத புதுக்கவிதையாய் நீ
சூடாத புதுமலாராய் நான்

என் கண்ணீரில் வண்ணம் கலையாமல் தோன்றும்
ஒரு அதிசய வானவில்லாய்க் காதலே நீயடி

களம் கண்ட விழுப்புண்களோ உடலில்
காதலின் ஆறாத காயங்களோ மனதில்

என்னை ஆட்கொள்ளும் அழகாய்
ஆண்டாளே நீயடி

ஒரு புன்னகையால் எனை மயக்கி,
ஒரு பூவாய் எனைச்சூடி
காதல் பித்தனாய் என்னை மாற்றிய
இதயத்திருடி இவள்தானா?

கண்டு இதயம் துடிக்க-காதலாகி
சுவாசமும் அவளிற்காய் ஏங்க-என்ன
மாயம் செய்தாளோ இந்த காதல் கள்ளி?

என் இதயத்தை விழுங்கிடத் துடிக்கும்
கயல்களும் அவள் விழிகளே!-காதலால்
என் நெஞ்சை துளைத்து வதைக்கும்
வேல்களும் அவள் விழிகளே!

கடந்துபோன காதல்-இன்றும்
ஆறாத காயமாய் இதயத்தில்

உன் வாசத்தை சுவாசம் ரசிக்க
நேசத்தை இதயம் சுவைக்க
சூடிக்கொள்ள நான் தவிக்கும்
வாசமுல்லை நீயடி

கண்வழி நுழைந்து-நெஞ்சில் உலவும்
காதல் நிலவாய் நீயடி

கயல்களோ அவள் முகத்தில்
காதல் தூண்டிலோ-என் இதயத்தில்.

படைப்பின் சிகரமாய்ப்-மானுடரை
படைத்த இறைவன், படைப்பை தொடர-மனித
நெஞ்சில் விதைத்தானோ காதலை?

விலக்கப் படாத காதல் மரத்தின்
கனியா கன்னி?

வானவில்லின் வண்ணங்கள் போதாது
கண்ணே, உன்னை ஓவியமாய் வரைய
வார்த்தைகளில்லையடி பெண்ணே
உன்னைக் கவிதையாய் நெய்ய

காதலி இன்றிக் கவிபாடும் நெஞ்சம் தந்தான்
காதலின் இறைவன்-இறைவா நீயே என் காதல்

வில்லும் அம்புமாய் அவள் விழிகள்
விழுந்த மானாய், என் காதல் நெஞ்சம்

ஆயிரம் வாசல் இதயத்தில் எத்தனை எத்தனை
அழியாத காதலின் அலங்கோலங்கள்.

என் நினைவே இல்லாத -உன்னிடம்
நெஞ்சைப் பறிகொடுத்தேன்
என் கனவே வராத உன்னிடம்
காதல் வரம் கேட்டேன்

என் விழிகாணும் அழகும் நீ
என் மொழிபாடும் கவிதையும் நீ

என் மனம் கவர்ந்த காதலே என் மனம் உன் வசமடி

காதலனாய் பிறந்தேனடி கண்ணம்மா
உன்னால் இதயம் குயிலாய் இசைபாட
கவிஞனுமானேனடி என்தன் செல்லம்மா.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-05-23

ஒரு ஜென்மம் போதாது

ஒரு ஜென்மம் போதாது என் காதலைச் சொல்ல,
பல ஜென்மங்கள் எடுத்தாலும் உன்மீது
நான் கொண்ட காதல் தீராது

கண்பார்த்தது -நெஞ்செழுதிய காதல் காவியமும்
வீணாணதே-கண்மணி
விண்பார்த்து மனம் இரசித்த தேன்நிலவும்
என் வானில் அமாவாசை நிலவானதே

நிழலாய்த் தொடர்ந்தேன்-நீயோ காணவில்லை
மலராய்ப் பூத்தேன் -நீயோ சூடவில்லை
நிலவாய் வந்தேன்- நீயோ இரசிக்கவில்லை-
என் காதலோ வாடிய மலராய் உதிர்ந்ததடி
நீயில்லா வாழ்வோ நிலவில்லா வானாய் ஆனதடி

பார்த்துப் பரவசமாய்ப பூத்த கண்களும்
அழுது சிவந்திருக்க,பூஜித்து நேசித்த
நெஞ்சமும் கண்பட்டுப், புண்பட
செய்த பாவம்தான் என்னவோ?

விழி நீரும் காயாது-விம்மலும் ஓயாது
தேவதாஸாய் மனம் புலம்பிட-பார்வதி
நீ தந்த காதல் பரிசு பெரிதடி
நெஞ்சற்ற காயமும் நின் காதலின்றி
ஒருபோதும் ஆறாது என் கண்மணி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-05-23

ஒரு வானம் ஒரு பூமி –மூன்று நிலாக்கள்

"மாங்கல்யம் தந்துனானேன் ம்மஜீவன ஹேதுநா
கண்டே பத்தாமி ஸீபகே த்வம்ஜீவ சரதஸ் சதம்"

மந்திரங்கள் ஒலிக்க மங்கல நாதங்கள் முழங்க
மையிட்ட விழிகளும் மதி முகமும் நாணிச்சிவக்க
மாங்கல்யம் அணிவித்து, நெற்றியில் குங்குமம் வைத்து
அக்கினியை வலம் வந்து கணவன் மனைவியான உறவு

மங்காத உறவாய் வாழ்வில் வந்தவளை
கூடி மகிழ்ந்து கோடிச் சுகம் சுவைத்து
கொண்டாட்டமாய்த் தொடங்கிய குடும்ப வாழ்வு
அகிலா இவள் மேனியிலும் பூவாசம்
சுவாசத்திலும் காதலியின் நேசம்.

நெஞ்சிலே கவிதை பிறக்க-கண் பார்த்ததெல்லாம்
கவிதையாய், காவியமாய் "கமரா" பதிக்க
வாழ்விலே வண்ணக்கோலங்கள்.

மொட்டவிழ்ந்த புது மலரில் தேனருந்தி
கட்டழகில் காமன் கவிதை படித்து-மொட்டுப்
போட்ட புதுப்பாடலை மோகனத்தில் இசைத்து
கஜீராஹோ சிற்பங்களாய் காதல்.
தாம்பத்ய வாழ்வோ கவிதையான உறவு.

பல யுகம் தவமிருந்து பெறத்தக்க வரமோ
பாவி எனக்குப் பத்தினியாய் வந்தது,
பவித்திரமாய் போற்றத்தக்க வீணையோ
என் வீட்டு புழுதியில் கிடந்தது.

மீட்டும் போதெல்லாம் ஒலிக்கும் அதிசயராகம்
அன்பை காட்டுவதே அதன் அழகிய பாவம்
கண்ணகியாய் வாழ்ந்தவளுக்கு
கோவலனாய் துரோகமிழைத்த பாவி நான்.

"மௌனிகா" படப்பிடிப்பில் கண்டவளை
நெஞ்சம் படம்பிடிக்க, மனமோ படபடக்க
பார்கத் தூண்டும் அழகு
பழகத்துடிக்கும் காதல் மனது.

என் நிலவும் அவளாகி நித்தம் கானும் கனவும் அவளாகி
விழிக்கும்போது மறைகின்றாள், தூங்கும்போது வருகின்றாள்
என் நெஞ்சில் காதல் விதை தூவிய பெண் கவிதை.

அவள் மேனியிலோ நவரசம்
மொழியிலும் விழியிலும் காதல் ரசம்
என் கமெரா விழிகளுக்கு அவளோ மோனலிசா
கண்டதும் மயங்கினேன் மனம் காதலில் புல்லரித்திட
நெஞ்சினில் இதுவரை காணாத பரவசம்

பார்த்த விழிகள் காதல் போதையில் தள்ளாட
நெஞ்சில் பரவசம் பொங்கும்- சுவைத்த
இதழ் “கள் போதையில்” இவளும் தள்ளாட
உயிர் மெய்கள் ஒன்றாய்க் கலந்திட த் துடிக்கும்

தன்னையே எனக்குத் தந்து தாலியில்லாமல் தாரமானாள்
பொன்னும் பொருளும் வேண்டாது-என் கலைக்கும்
காதலுக்கும் இணையில்லாத இரசிகையானாள்.
வாழ்வும் மேலும் இனிக்க வசந்தம் தொடர
வாழ்விலே புதிய பிடிப்பு -நாளும் படப்பிடிப்பு

புதிய இணைப்பாய் வந்தவள்
தேனிலும் இனிய சுவையாய் இனிக்க
காலம் பலபோனபின்-காதலன்
நானும் தாலி ஈந்து கணவணானேன்.

ஷோபா கண்ணே கலைமானே, கன்னிமயில் என
கண்டேன் உன்னை நானே அழியாத கோலமாய்
ஆன்மா எழுதிய கவிதையாய் வாழ்வில் கலந்த தேவதை

குமரிப்பெண்ணும் குழந்தை உள்ளமும்
என் நெஞ்சைக் கொள்ளை கொள்ள
மார்பிலும் தோளிலும் தொங்கிய வண்ணக்கிளி
நெஞ்சை கொத்தி காதலை சொல்லிய
காதல் மரங்கொத்தி

மறக்கவும் மறைக்கவும் முடியாத மனம்
இளமையில் குதுாகலிக்க, காதலில் சங்கமிக்க
சமூக வரம்பையும் வயதெல்லையையும் தாண்டிய
புதிய காதல் உறவால், நெஞ்சில் பூக்கோலம்

இதயத்திலோ இளமையின் புதுவெள்ளம்
ஒன்றுக்குள் ஒன்றான காதல் உறவுகள்
உணர்வுகளை உருக்கிட-இதயம் முழுதும் காதல்,
காமத்துப்பால் கடந்த புது இலக்கணமாய் ஊடல்

பகிர்ந்தும் தீராத காதலால் பரவசத்தில் மனம்பூரித்திட
ஆண்டாளாய், ராதையாய், ருக்மணியாய்-என்னை
ஆட்கொண்ட காதலால் வாழ்விலே வற்றாத வசந்தம்.
வாழ்வே காதல்-காதலே வாழ்வு

தேடி வந்த செல்வமாய்த் தேவதைகளின்
காதல் உறவு, நாடி நரம்புகளிலோ
மோகனராகத்தின் ஓயாத அதிர்வு.

ஷோபாவின் தீராத காதலுக்கு ஓயாத எதிர்ப்புக்கள்
எதிர்நீச்சல போட்டுக் களைத்த பூங்குயிலும்
இறகொடிந்து தரையில் வீழ்ந்தது-பின்
மனமுடைந்து விஷத்தில் வாழ்வை முடித்திட
கண்ணாடியாய் நொருங்கிபோன என் இதயம்

என் அழியாத கோலம் கலைந்துபோயிட
ஆறாத காயம் நெஞ்சை வாட்டுது.
வயதும் வனப்பும் கடந்து
இதயம் எழுதிய காவிய காதல் கோலம்
கலைந்துபோனது, காலனிடம் தஞ்சமானது
என் வாழ்வோ சூனியமானது.

உமையவளுக்கு காதலால்-பாதி உடல் ஈந்த உமையொருபாகனும்
காதலி கங்கைக்கும் சடையில் ஓரிடம் கொடுத்தார்.
இறையானார் பாடலில் குறைகண்ட
நக்கீரனாாக்கு காதல் புரியாது -நெற்றிக்கண்
ஞானபுருஷருக்கே!

உணர்வில் வாழும் காதலர் உலகு சொர்கமே
அறிவில் வாழும் புலவர் உலகில்
ஓயாத தர்க்கமே, வேண்டாத விவாதமே

பூக்களை தேனீக்கள் சுவைக்க, கவிஞன் கவிதையால் ரசிக்க
பறித்துச் சூடும் பூவையும் பூவைக் கொல்கிறாள்
பக்தியோடு இறைவனுக்கு பூமாலை சாத்தும்
பக்தனும் பூக்களைச் சாகடிக்கிறான்.

விளக்கிடக் காதல் ஒன்றும் கணக்கல்ல
விடை சொல்ல அறிவு சார் பாடமல்ல
காதல் இதயங்களின் உணர்வு, இருமனம் ஒத்த காவியம்.
புரிந்து கொள்ள காதல் இதயம் வேண்டும்

ஒருவனுக்கு ஒருத்தி
திருமண பந்தத்தின் நியதி

காதல், திருமணமல்ல அன்பின் பகிர்வு
இதயங்களின் ஆனந்த நெகிழ்வு
ஒன்றுக்குள் ஒன்றாய்க் கரையும் உறவு
அத்வைத ஆனந்த நிகழ்வு

பூக்கள் மலர்வதையும், புள்ளினம் பாடுவதையும்
பொழுது புலர்வதையும் தடுப்பவர் யார்?
மழை விழப் புல் தானாய் முளைக்கின்றது
விதைத்வன் யார்? நீருற்றுபவன் எவன்?

என் இதயத்தில் ஆயிரம் வாசல்கள்-அங்கும்
அன்பு மங்கையரின் காதல் கோலங்கள்.
என் இதயத் துடிப்பிலும் காதலின் இன்னிசை
என் சுவாசக்காற்றிலும் காதல் மங்கையரின் உபாசனை.
அழகு தேவதைகளின் அதிசய ரசனை

அன்னையிடம் தாய்ப்பால்
காதல் மங்கையிடம் காமத்துப்பால்
காதல் குழந்தை நான் -காமமே கடவள்
காதலே புண்ணியம்.

ஒரு வானில் மூன்று நிலாக்கள் -எத்தனை அதிசயம்
ஒவ்வொன்றும் ஒருவிதம்-அமாவாசையில்லாத இரவுகள்
அர்தநாரிஸ்வரராய் உறவுகள்.

என்னோடு தன்னைப் பகிர்ந்தவர்கள் மகிழ்ந்தார்கள்
இறையன்பெனக் காதலைச் சுவைத்தார்கள்
காதலும் கடவுளைச் சேரும் வழியே.
காமமும் சொர்க்கவாசலே

காதலால் உயிர்க்கின்றேன், காதலாகிப் படைக்கின்றேன்
காதலால் நான் வாழ்கின்றேன்-காதலே வாழ்வு
காதல் போயின் சாதலே சாதலே சாதலே
இது என் வாழ்க்கைப்பயணம்

பயணியாய் வந்தவர் பாதிவழியில் இறங்கினார்
என்னில் பாதியாய்க் கலந்தவள் எல்லாம்
என்னோடு வருகிறாள்

பாவி நான் தேவனல்ல, காதலால் என்னை இழந்தேன்
தன்னைத் தந்தவர்களுக்கு, என்னைக் கொடுத்தேன்.
தேவராகமாய் என் காதல், ஓயாத கானமாய் என் பாடல்

காதல் மெய்யின் மொழியல்ல, அது உயிரின் இசை
மெய்யை பிணி சுவைக்கும், நோய் தீண்டும்
மரணம் கொல்லும்,காதலுக்கு சாவில்லை
காதலே கடவுள்.

அகிலா என் சுவாசம்-மௌனிகா என் கவிதை
ஷோபா என் இதயராகம்

மானுடரே காதல் செய்வீர்!
(பானு மகேந்திரா)

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-07-05-23

பகல் நிலவு

பூக்களால் சொன்ன காதல் வாடிப்போனது,
பாக்களால் சொன்ன காதல் காகிதமாய்க் கசங்கி கிடக்குது,
விழிகளால் சொன்ன காதல் என்னை அழ வைத்தது,
மொழிகளால் சொன்ன காதல் என்னை ஊமையாக்கியது

வாழ்த்து மடல்களால் சொன்ன காதல்
வருத்திடும் முள்ளானது-என் புத்தகங்களுக்குள்
இறகொடிந்த பறவைகளாய் கவிதைகள்,
கூண்டு கிளிகளாய் வாழ்த்து மடல்கள்.

“இலையுதிர்காலச் சருகுகள்போல்-மனிதர்கள்
நிறைந்த உலகில்-உங்களைப்போல் சிலர்
“மண்ணில் கிடக்கும் வைரங்களே” என வாழ்த்தியவள்
“அனைத்தையும் உங்களோடு பகிர்ந்திட ஆவல்
அதிலும் அர்ப்பணமாய் என் இதயத்தை பகிர்ந்திட பேராவல்”
கவிதையாய் மொழிந்தவளால் காதலாகிப்போன நெஞ்சம்

“முதல் மனிதனை கண்ட மங்கையாய் நான்”
நாணத்தின் கோலம் மேனியிலே
காதலின் வண்ணம் இதயத்திலே-காதலைக்
கண்களால் விதைத்தவள் காணாமல் போயிட
நிலவில்லா வானாய் நெஞ்சம் இருண்டிட
நினைவுகளை மீட்டிப்பார்கிறேன்
நெஞ்சம் வலிக்கின்றது.

கொழுகொம்பாய் நானிருக்க-முல்லையோ
பாரியின் தேர் தேடிப்போனது,
கலாபமயிலாய் நானிருக்க என் மயிலோ
பேகனின் போர்வை தேடிப் பறந்தது-ஊரையும்,
என் இதயத்தையும் விட்டு பிரிந்தது.

நள்ளிரவிலும் காதல்மொழி பேசிய
தொலைபேசி ஊமையானது-மறவாமல்
பிறந்தநாள் வாழ்த்து பாடிய குயிலும்
என்னை மறந்து ஊமையானது.

காதலின் வண்ணக் கனவுகள் கலைந்திட,
வசந்த மாளிகையும் இடிந்து வீழ்ந்திட
புயலழித்த பூவனமாய் வாடும் மனம்.
நூலறுந்த காற்றாடியாய் அலையும் தினம்

காதலனாய் நான் தவமிருக்க-தாயாய்
அவளோ புதுப்பிறப்பெடுக்க,
என் காதலும் பகல் நிலவானது
என் கனவும் கானல் நீரானது.

நீர் தேடி மண்ணுக்குள்
விரிந்து அலையும் வேர்களைப்போல்
மனதுக்குள் அவள் அன்பைத்தேடி
இன்றும், அலையும் நினைவுகள்.

பூக்களைக் காணும்போதெல்லாம்,
நெஞ்சிலே முள்தைக்கும் வேதனை
காதல் கவிதைகள் கேட்கும்போதெல்லாம்
கண்களில் நீர் வடியும் சோதனை

இன்றும், ஒற்றைக் குயிலாய் கரையும் உள்ளம்
வற்றாத நீராய் நெஞ்சில் காதல் வெள்ளம்.

உறங்கிக்கிடக்கும் எரிமலையாய்-நெஞ்சில்
துாங்கிக்கிடக்கும் அவள் காதல் நினைவு
மெல்ல கண்விழிக்கும்போதெல்லாம்
எரிநரகாய் துன்புறும் காதல் மனது

கொடிது கொடிது காதல், எரி நரகிலும் கொடிது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-07-05-23

பாலும் பழமும்

பாலின் “ஆடை” களையத் துச்சாதனனாய் தீயும் முயல,
பாஞ்சாலிக்கு ஆடை கொடுத்த பரந்தாமன்
கொதித்துக் குமுறிக் கதறி கூவியழைத்த பாலுக்கும்
“மேலாடை” கொடுத்திட- கொதித்த பாலும்
ஆடை அணிந்தது வெட்கம் வந்ததால் போலும்?

என் கண்பட்ட கன்னியும், காதலால் நாணமுடுத்து
கனியாய் சிவந்து நின்றே, நீ விரும்பும் தேன்கனி நான்தான்
கண்ணாளா, காதலால்-எனை
உண்டு என் காதல் பசி தீர் என்றாள்.

“நாணமே நல்லாடையாய்” இருக்க
நங்கையருக்கு பர்தாக்கள் ஏனோ?
“பார்க்கும் விழிகள்”
பாவம் செய்திடத் துணிந்தால் தடுப்பவர் யார்?

பர்தாவும் துணியே இரும்புத்திரையல்லவே,
காமம் கடந்து கடவுளாகாத மனமும்
ஐவேளைத் தொழுதலும் வீண்தானோ?
ஷரியாவிலும் புரியாத அடக்குமுறைதானோ?

பூக்களுக்குத் திரை எதற்கு?-வான நிலவிற்கும்
புள்ளினங்களுக்கு ஆடை எதற்கு?

விழிப்புணர்வே மோட்சம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-07-05-23

பாலும் தெளிதேனும்

மஞ்சளும், குங்குமமும், திருமாங்கல்யமும்
கார்குழல் சூட மதுமலரும், மையிட்ட விழிகள் நாணி மயங்க
கொடியிடைக்கு நூபுரமும் நான் தருவேன்



செவ்வாழை கால்களுக்கு தங்க கொலுசும்
முத்துப்பல் ஒளிர்ந்து மோகனப்புன்னகை மலர
வெண்சங்கு கழுத்துக்கு முத்தாரமும்
பூங்கரங்களுக்கு பொன்வளையல்களும்
பூட்டி நான் மகிழ்வேன்

சின்ன விரல்களுக்கு தங்கமெட்டியும்
நாளும் பூத்து குலுங்க பொன்மணி உனக்கு
எந்நாளும் காதலும் நான் அருள்வேன்

ஜப்பான் அழகியே உன் கொவ்வையிதழ்த் தேன் பருகி
நூலிடை நான் தழுவி காதல் போதையில்
கவிபாட கண்மணி நீ எனக்கு உன்
காதல் நெஞ்சைத் தா.

உனக்காய் துடிக்கும் என் இதயம்
அமைதிகாண ஆருயிரே
என் வாழ்வின் அன்புத்துணையாய் வா

என் அருகே நீ இருக்க என் மனமோ
இறகு விரித்து வான் பறக்க-
காதல் வர வயதில்லை-காதலுக்கும் வயதில்லை

கடல் கடந்தேன் உன்னைக் காண-காதல்
தேவதையே உன் தரிசனமோ
கனவிலும் வருத்துமடி, காதல் காதல் என்றே
என் மனமும் உன்னை எண்ணித் துடிக்குமடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-07-05-23

பர்தா

வாசப் பூக்களுக்கும், வண்ணக் கிளிகளுக்கும்
கறுப்புப் போர்வைகள்-ஐவேளை தொழுது
அல்குரான் ஓதியும் போகாத மனஅழுக்குகள்.

பர்தாவும், ஹபாயாவும் மூடியும்-நெஞ்சில்
அவியாத நெருப்பாய்க் காமம்-ஹச் கடன் முடித்தும்
தீராத கடனாய் மனதில் ஓயாத மோகம்

மலர்களையும் மொட்டாக்கும் சிறையோ-பர்தா
பெண்ணியத்தின் சுதந்திரத்தை பறிக்கும்
பொல்லாத அடக்கு முறையோ -ஷரியா

தூய உள்ளம் பார்த்து மகிழ்வதெல்லாம்
தூயவனின் படைப்பை
எங்கும் இருப்பதும், எல்லாமாய் விரிந்ததும்
வல்ல அல்லாவின் மா கருணை

சிகிரியா ஓவியங்களுக்கும், கஜீராகு
சிபங்களுக்கும், போர்வைகள் தேவை என்றாள்
மதக் குருடர்களே உலகை ஆளுவார்

முழுமையின் மலர்ச்சியே அழகு, மூடிவைத்தல் பாவமே
படைத்தவனை இழிவு செய்யும் அவலமே
வான் நிலவையும் வண்ண மலர்களையும்-இறைவன்
மூடி வைக்கவில்லை-படைத்தபோது
ஆதாம் ஏவாளிற்கும் ஆடை கொடுக்கவில்லை
பர்தாவும், ஹபாயாவும் ஏவாளிற்குத் தேவையில்லை

ஓதுதலும், தொழுகையும் வெற்றுச் சடங்கானாள்
மூடி மறைத்தாலும், அடக்கி ஆண்டாளும்
அடங்காது காமம், அணையாது மோகத்தீ
காமத்திற்கு-பர்தாவும், ஹபாயாவும் இரும்புத் திரையாகாது-
மெய்யோட கலந்த உணர்வு பொய்யாகிப் போகாது-
விழிப்புணர்வே பர்தா, விழிப்புணர்வே ஹபாயா

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-05-23

பெண் பிறவி

காமன் வருத்தக், காரிகையும் மயங்கக், கணவன்
கௌதமுனியும் காக்கத் தவறிய அகலிகையின் கற்பு,
இந்திரமோகத்தால் மணமிழந்து நாறிட -மங்கையும்
மாலையிட்டவன் சாபத்தால் கல்லாகிக்-காத்திருந்தாள்
காலம் பல, ஏக பத்தினி விரதன் ஸ்ரீராமன் கால்பட

கல்லாய் உணர்வற்றுப்போன அபலையின் மனதில்,
கணவனும் அண்ணகனாய், இந்திரனும் காமுகனாய்,
ஆணினமே, ஆணவ வடிவாய்த் தோன்றிய அவலம்

கல்லான மங்கையும் ஸ்ரீராமன் கால்படப் பெண்ணானள்
கரம்பிடித்த பத்தினி சீதையோ வனவாசம், அசோகவனச்
சிறை வாசம் என அல்லாடித்-தீக்குளித்து துயருற்றாள்,
பின்னாளில் கர்ப்பிணி மகாராணிக்கு கானகமே
வாழ்வானது, கடும் துயரால் ***மனமோ கல்லானது***

மாதவியே தஞ்சமென மணாளன் கிடக்க
மனமோ கோவலனுக்காய்த் தவமிருக்க-மனம் மாறிய
கணவனுக்கு ஈந்த காற்சிலம்பும் காலனாகிக்
கள்வனாய் கணவன் உயிரிழக்க-மங்கையும்
விதவையாக, மாமதுரையோ தீக்கிரையானது.

பரத்தையிடம் தோற்றவளோ, பாண்டியனை வென்றாள்
மாங்கல்யத்தை இழந்தவளோ, மதுரையை எரித்தாள்.

பரத்தையா குலத்தில் பிறந்ததினால் -மாதவியும்,
மணிமேகலையும் பட்ட துயர் பெரிது,
கோவலனும், காவலனும் மோகிக்க
தாயும் மகளும் உற்ற துன்பம் கொடிது.

பரத்தையர் சுகம் தேடிடும் பதியை-கூடையில்
சுமந்த நளாயினி உடலிலும், மனதிலும் இமயச் சோகம்
பீஷ்மரை கொன்றிட, சிகண்டியாய் மாறிட
அம்பையின் வாழ்விலும் ஆயிரம் துன்பம்.

உண்மைக்காய், நாடிழந்து, மகனிழந்து-சுடலை
வெட்டியானாய் நாடான்ற மன்னன் நிலைமாற,
வேலைக்காரியாய் மகாராணி விலைபோக,
சந்திரமதி வாழ்விலும் சத்தியசோதனை.

ஒருவனுக்கு மாலை சூடி-ஐவருக்கு மனைவியாகி
அவை நடுவே துகில் கலையத் துயருற்று,
பூவின்றி, நெய்யின்றி வாடும் கலைந்த கூந்தலோடு
வனவாசம், அஞ்ஞாத வாசமாய் பாஞ்சாலியின் வாழ்வு.

மகாராணியாய் அரியணை அமர்ந்தாலும்
மனதில், இறந்த குழந்தைகளின் துயரம்,
வாரி முடித்த கூந்தலிலோ, இன்னும்
நாறி மணந்திடும் துச்சாதனனின் இரத்தம்

ஆயிரம் கனவுகள் கண்களில் துளிர்க்க
ஆடிப்பாடிய அரசகுமாரி காந்தாரி வாழ்வும்
பீஷ்மரால் காந்தாரமாய் மாறிட,
அந்தகனை மணந்து அந்தகியான மகாராணி,
குருஷேத்திர யுத்தத்தில் கௌரவர் குலமழிய,
இவள் வாழ்விலும் கலையாத இருளாய்த் துயர்

விசித்திரவீரியனுக்கு மனைவியராகி
இளமையில் கைமைபூண்டு, வேதவியாசன்
விந்தேற்று, சந்ததி கொடுத்த சகோதரிகள்
அம்பிகை, அம்பாலிகை வாழ்விலும் அவலம்.

நாடாளும் மன்னன் துஷ்யந்தனை
மணாளன் என உரிமை கொண்டாட-சகுந்தலை
பட்டதோ சொல்லொன்னாத் துயரம்

சீதனமின்றி, முதுகன்னியராய் சீரழியும் வாழ்வும் வேண்டாம்-
பரத்தையராய், திருமங்கையராய், விலை மாதராய்
உருவழியும் கொடிய வாழ்வும் வேண்டாம், பெண்ணாய்ப்
பிறக்கவும் வேண்டாம், தாயாய்ப் போற்றவும் வேண்டாம்.

சீதனம் கொடுத்து, மாங்கல்யம் வாங்கி ,
காமனை வென்று, சந்தி பெருக்கி,
மாடாய் உழைத்து, ஓடாய் தேய்ந்து
கணவன் சலித்து விலக்கையில் விவாகம் ரத்து

கணவன் இறக்கையில் விதவையோ செல்லாச்சொத்து
வேஷங்கள் பல ஏற்கும் தாய்களின் வாழ்வில்
பெண்மையின் பல அவல அவதாரங்கள்.

அலகையிடம் ஏமாந்த ஏவாளை, ஆதாம் மன்னிக்கவில்லை,
ஆண்டவனும் தண்டிக்கத் தவறவில்லை.
கல்லான மனதோடு-இன்றும் ஏமாறும் ஏவாளாய்,
அகலிகையாய், சீதையாய், முலையிழந்து உருவழிந்த கண்ணகியாய்,
அம்பையாய், அரவாணிகளாய் கண்ணீரில் வாழும் தாய்குலம்

கற்பிழந்த அகலிகையும்-கௌதமன் சாபத்தால் கல்லானது அதிசயம்,
கற்பிழந்தா "ஆண்குறியும்" கல்லாகி யோனியில் தவமிருக்கும்
"கடவுளானது" அதிசயத்திலும் அதிசயம்.
"கல்லாகிடச் சாபமும்-கடவுளாகிட வரமும்" யார் கொடுத்தார்?

பெண்ணும் கல்லாகித் தீண்டாத பிறவியானாள்
கடவுளரின் ஆண்குறியும் கல்லாய் மாறி-லிங்கமாய்ப் போகுமோ?
யாரிட்ட சாபம் கோயிலெங்கும் கற்சிலைகள்
ஸ்ரீராமனுக்காய் காத்திருக்கும் அகலிகைகளா ?

தீக்குளித்த சீதையால் இராவணண் கற்பு நிரூபணமானது,
"பூஞ்சோலையில்" சிறைவைத்தவன் காதலிலும் பூமணம் கமழ்ந்தது.
வண்ணான் மொழிகேட்டு, "வனத்தில் கைவிட்டவன் மனமோ
வரட்டு நீதியால் நாறிட, கர்ப்பிணி மனமோ கல்லாகிபோனது,
பூமி பிளந்திட தாய்மடி சேர்ந்தது.

அசையும் சொத்தோ மனைவி ?-நினைத்தபோது கூடி மகிழ
மாதவியும் இவள்தானோ? மனம் கசந்தபோது
விவாகரத்து செய்திட சீதையும் இவள்தானோ?
மாங்கல்யமும் மாதரசிகளுக்கு இரும்புத் தளைதானோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-05-23

பொன் மேனி

கல்விச் சுகமும் சில கணமே-கொஞ்சி மகிழும்
கொவ்வைச் செவ்விதழ் அமுதும்
பல் துலக்காத வாயில் விஷமே

இந்திரனும், சந்திரனும்,
மாமுனிகளும் மயங்கிய மாதர் மேனியும்
தீட்டானால், அழுக்கானாள் நாறும்,
பூங்குழலும் சிக்குப்பிடிக்க பேன்கள் கூடும்

கனிரச முத்தமும் கள்ளாய்ப் போகும்
அறுபது நாள் ஆசையும், முப்பது வருஷ மோகமும்
காமம் தீய்ந்தால் கணங்களே,
காமமும் மாயையே, மோகமும் மாயையே
பருவத்தே தேகத்தில் எழுந்து விழும் அலைகளே

உறங்கியது போதும், விழித்தெழு மானுடா
மங்கையர் சுகத்தால் விழிப்புற்ற ஞானிகளும் இல்லை,
காமத்தால் சறுக்கிடும் முனிகளும், சாமிகளும்
இன்றும் தொடரும் அவலநிலை
ஓ நித்தியானந்தா! மாறவில்லை

ஆணும், பெண்ணும் கலந்த உடம்பும்
அரவாணியாய்ப் போகுமே-ஐயப்பா?
ஹரனும், ஹரியம் கலந்த-உன் கதையும்
அதிசயம்தான் சொல்லப்பா?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-05-23

பூக்களைப் பறிக்காதீர்கள்

வண்டருந்தப் பொழிகின்ற தேன்கமிழ்ப் பூங்கொடியே,
கண்ணருந்திக் களிகொள்ள, நெஞ்சருந்திக் காதல் கொள்ள,
நான் பொழிந்த காதலில் நாணமுற்ற மடந்தை
கார்குழல் சூடப் பூத் தருவாயா?
பூவையையும் ஒரு பூவாய் நான் சூட
மணமாலை தருவாயா?

பூங்கொடியே-நெஞ்சுற்ற விடாய் தணிக்க
வண்ணத்துப் பூச்சிகளுக்கும்,
பூங்குருவிகளுக்கும் தேன் வழங்கும் வள்ளலே
உனக்கோர் பாமாலை நான் பாடுவேன்
என் பாவை சூடிட- வரமாய்
எனக்குப் பூக்கள் தருவாயா?

பூவைக் கொய்தலும் கொலையே
பறித்தலும் களவே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-05-23

பூங்குழலி

ஊர் கேட்டேன், பெயர் கேட்டேன், கதைபேசி மகிழ
அலைபேசி எண் கேட்டேன்
பவளச்செவ்வாயில் அமுது ததும்ப-மாதிவள்
மதுமலரோ என மனம் மயங்கித் தவிக்க,
பார்த்து மயங்கிய அழகை-தினம் பார்த்து மகிழப்
பாவையவள் உருவப் படம் கேட்டேன்

பூத்துக் குலுங்கும் பொற்கொடியும் படர
என்தோள் ஈய வரம் கேட்டேன்,
காதல் கேட்டேன்-காலமெல்லாம்
கலந்து மகிழக் கனிமொழி இதயம் கேட்டேன்

வாழ்வே அவள் வாழ்வோடு இணைய
வாழும் கலை கேட்டேன்
தாயாய்த், தாரமாய்த், தோழியாய்த்
என்னைத் தாங்கிடும் (ஆ) தாரமாய்,
வாழ்க்கைத் துணையாய் வர வரம் கேட்டேன்

தருவாளா கண்மணி -தவமாய்த்
தவமிருக்கும் காதல் முனி
தருவாள் வரம் என் தேவி-நம்பிக்கையோடு
துடிக்கும் என் ஆவி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-05-23

பூவை ஒரு பூவனம்

கண்டதும் குவளைக் கண்கள் பூத்துக் குலுங்கக்
கவிதை சொன்னதும்-பூங்கன்னங்கள் செம்பூவாய்ச் சிவக்க-
செவ்விதழ்கள் காதல் தேன்சிந்தப் புன்னகைத்தாள்.

கொடியிடை முல்லையில் ஆயிரம் மலர் வாசம்
அன்ன நடை செல்லும் வழியினில்
இமைக்காத தேவர்களாய்க் காளையர் உபவாசம்.

பூவனமோ இவள் என மனம் திகைக்க,
மதுமலர் சூடிய கார்குழலும், புதுமலரென ஆடும் சிமிக்கிகளும்,
பூவோ என வியக்கும் செங்கமலப் பாதங்களும்
என்னை மயக்கியதே

மூன்றாம் பிறை நுதல் சூடிய மொட்டாய்ப் பொட்டும்,
காஞ்சி மறைத்திட்ட சிறுபூவாய் தொப்புள்,
காந்தள் மலர்க்கரங்களும், செம்பக மூக்கும்,
குமுத வாயும், கொல்லும் வெண் தாமரை முகமும்
பூவையிவளில்தான் எத்தனை பூக்கள் மனம் வியந்ததே


காதல் மலராய்ச் சூடி, கண்ணனாய் என்னை மாற்றியவள்
சூடிகொடுத்த பூவை ஆண்டாளோ? ராதையோ
சொல் மனமே சொல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-05-23

புலவனும் இரசிகனும்.

தருமியின் வறுமை நீங்கிட, வள்ளலாய்
இறையனார் எழுதிய பாடலிலும்-தர்மமின்றிக்
குறையென்றான் தமிழ்ச் சங்கத் தலைவன்
புலவன் நக்கீரன்.





சொற்குற்றம், பொருட் குற்றம் சொல்லப்
சொல்லாடல் போராகிச்-சொக்கனும்
புலவன் மனம் வெளுக்க
நெற்றிக்கண்ணால் புடமிட்டான்

பொற்றாமரை குளமே-கீரனுக்கு
வெம்மை தணிக்கப் புகலிடமானது
எழுதியவன் இறைவன் நிதரிசனமானது

மானுடம் அறியாத உள்ளுணர்வின் உயர் நிலையில்
மகாதேவன் எழுதிய செய்யுள்
குறை சொல்லி அறியாமையை பறைசாற்றும்
ஆணவ இருமைக்குள் மனிதம்



மாதரசிகள் கூந்தல் வாசமும் செயற்கை என்று
புலவன் பொருட் குற்றம் காண
படைத்தவனுக்கும் விமர்சகனுக்கும் நடந்த விவாதத்தில்
புலவன் புரியாத உண்மையைப் புரிந்திட
இறையனார்க்கும் வல்லமையே சாட்சியானது.



அனுபூதியால் அறியும் உண்மை-வார்த்தை
கடந்த செய்யுளுக்குள் அடங்காத மேன்மை
புலவகும் புரிந்திடத் திரு விளையாடல் ஆனதோ?



பூவறியும் வண்டும் பூந்தேனும், மணமும் அறியும்?-
மதுமலர்க் கூந்தல் வாசம் காதலனே அறிவான்
மாதரசிகள் பூங்குழல் வாசம் உத்தமக் கணவனே அறிவான்

“மன வாசம்” தேடும் இறைவனுக்கு மணம் வீசும்
வண்ண மலர்களால் பூஜை-மன வாசம் காணாத
இறைவனோ இன்று அஞ்ஞாத வாசம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

புரட்சிக் காதலன்

இளமையும் அழகும் துள்ளியபோது
இவன் இதயமேடையில்-தினம்
ஒரு காதல் நாடகம்.

பருவகாலப் பூக்களாய், காதல் ராணிகள்
கனவுக் கன்னிகள், அழகு தேவதைகள்
இதயமேடையில் உலாவந்து
ஒய்யார நடைபோட்டுச் செல்ல
பணத்திமிரால், ஆணவத்தால்
கன்னியரை ஏமாற்றியவன்-கடைசியில்
சுந்தரமில்லாச் சூர்பநகையிடம்-சீதனத்திற்கு
விலைபோன பரிதாபம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

காதல் ஒரு புதை மணல்

முளைவிடும் தளிருக்கும் பாறை வழிவிடும்போது,
நெஞ்சில் துளிர்விடும் காதலை
ஈரக் கயல்விழிகளால் இரந்திடும் தேவதைக்கு,
உள்ளமும் உவந்து, நெகிழ்ந்து வழிவிட,
செம்புலப்பெய் நீர்போல்-அன்புடை
நெஞ்சங்கள்தான் கலந்து மகிழ்ந்திட,
நாளும் வாழ்விலே புதுவசந்தம்.

புவியும், நிலவுமாய்ச் சுற்றி மகிழ்ந்த காதலுக்கு கண்பட,
சுற்றி வந்த தேன்நிலவும் பாதைமாறி விலகிட,
அண்டவெளியில் அலையும் விண்கல்லாய்
அழகிழந்துபோனது என் காதல் வாழ்வு.

அவள் பிரிவோ ஆறாத பெருங்காயமானது,
துயரோ அழியாக்கோலமானது.
ஊனமானது என் நெஞ்சம் அவள் அன்பின்றி
ஒரு தலைராகமானது என் காதல்

காதல் எத்துனை பைத்தியகாரத்தனமானது!
காதலில் தோற்றவர்க்கே புரியும்,
அவளைத்தவிர நினைப்பதற்கு ஏதுமில்லை,
அவளையன்றி மறப்பதற்கும் எதுவுமில்லை.

துடிக்கத்தெரிந்த இதயம் நடிக்கத்தெரியாது தவிக்கும்,
நினைக்கத்தெரிந்த இதயம்-மறக்கத்தெரியாமல் தவிக்கும்
நேசிக்க தெரிந்த உறவு-வெறுக்கத் தெரியாது துடிக்கும்.

மூடிய விழிகளுக்குள் நினைவாய், கனவாய் அவள்,
தவிக்கும் இதயத்தில் துடிப்பாய், துயராய் அவள்
முல்லை நெஞ்சிலோ நெருஞ்சியின் ஆட்சி,
மூடிய விழிகளிலோ ஓயாத சோகநீர்வீழ்ச்சி,

பூவிதயத்திலோ பிரிவின் பேரதிர்ச்சி,
மயக்கிடும் காதலும் வெறும் மாயக்கவர்ச்சி.

காதலும் புதைமணலோ?,
விழுந்தபின் எழுமுடியாது தவிக்கிறேன்,
மறந்தவளை நினைத்து துடிக்கிறேன்
மறக்கமுடியாது தவிக்கிறேன்.

பட்டுப்போன வாழ்விலே –காதல்
மெட்டு போடாத ராகமாய்,
போட்டு முடிக்காத கோலமாய் மாறிட,
காதல் தவத்திற்கு சாபமே வரமான அவலம்.
ஓ என் இறைவா! ஏன் இந்த வாழ்வு?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

சந்திப்பு

காதல் தேன்மழையே ! வான்பாய்ந்த எந்தன் காதல் நெஞ்சும்
உன் பிரிவால் வற்றிக்காய்ந்ததடி-வண்ணப்பூவே,
வாசமலரே, பூச்சூட உனக்காய் மலர்ந்த பூவனமும்
நீயின்றி நீரின்றி வாடிப்போகுதடி

வானம்பாடிகளாய் பாடிக்களித்த நம் காதலும்,
பல்லவி, சரணமின்றி –ஏழ்மையால்
சட்டென்று, பரிதாபமாய் முடிந்தது ஏனடி

கடைசியாக, கண்ணாளனே ஆசைதீர கண்களால்
என்னைப்பருகி காதல் போதையை தணித்துக்கொள்,
உன் இதயம் வரைந்த காதல் ஓவியத்தை கலைத்துவிட்டு,
அன்பே என்னை மறந்துவிடு

இறுதியாய் என்னை இறுக அணைத்து
எரியும் காதல் தீயை அணைத்துவிடு- நாளை
என் திருமணம் இதுவே நம் இறுதிச் சந்திப்பு.
கண்ணீர் சிந்திக் கதறித் துடித்த அன்றில்கள்

ஏழ்மையால், ஒரு வெள்ளாடாய் அவளும் விலைபோக,
இயலாமையால் , பெற்றோரும் அவளைக் கைநெகிழ,
செல்லாகாசானது அவள் காதல்,
செவிடன் காதில் ஊதிய சங்கானது அவள் அழுகை.

கண்ணீரில் கரையும் காதல் இதயங்கள்,
வெந்நீரில் விழுந்த பொன்மீன்களாய்த் துடிக்க,
காதலும், கானல் நீராய்,
கலையும் வண்ணக்கனவாய் மாறியதே!

சூடிடக் கோர்த்த பூமாலையும் அறுந்து, புழுதியில் வீழ்ந்திட
-வறுமையால், வரட்டுச் சமூக, மத பாரம்பரியத்தால்.
கொஞ்சி மகிழ்ந்த அன்றில்கள் குமுறிப் பிரிந்து போயின.

காதல் மனங்களை விட-மதமே முக்கியம்,
கதையறிந்த மௌலவியும் கைவிரிக்க,
சூனியமான காதல் நெஞ்சங்கள்.
சூம்பிக் கல்லான சொந்தங்கள்.

ஏழைகளின் காதலை-ஏலமிட்டு, ஏப்பமிடும்
“ஷைலொக்குகளின்” வாழ்வில் காதலும் வியாபாரமே!
ஏழைக் கன்னிகளும் சப்பித்துப்பிட
கட்டிக் கரும்புகளே!

பருந்தொன்றின் காமவிருந்திற்காய் விலைபோன பெண்புறா
ஜோடியை பிரிந்த துயரத்தில் ஆவியைத் துறந்து
தன் அழியாக் காதலைச் சொன்ன ஆண்புறா

இணை பிரியாக்காதலும்-
வறுமையால் தன் துணையை இழந்தது,
அழிவில்லாக் காதலும்-முதலிரவில்
அவள் இறப்பினால், புது பிறப்பானது!
புதுக்காவியமானது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23